விலை ரூபா: 7.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

Valampurii


பக்கங்கள்:- பத்து

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 ஆவணி 30 புதன்கிழமை (15.09.2004) தொலைபேசி - 2223378 ஒலி 271

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.
சீமெந்து

## சிங்களதேசத்திற்கு தெளிவுபடுத்துங்கள்

# புலிகள் சிங்கள மக்களுக்கு எதிரானவர்கள் அல்லர்!



### சு.ப.தமிழ்ச்செல்வன் தென்னிலங்கைச் செய்தியாளர்களிடம் தெரிவிப்பு

(நமது நிருபர்)

இந்நாட்டில் வாழுகின்ற சிங்கள மக்கள் தமது பிரதேசத்தில் அனுபவிக்கின்ற அரசியல் உரிமைகளை ஒத்ததான உரிமைகளை தமிழ்மக்களும் அனுபவிக்க வேண்டும். அவர்கள் தமது அரசியல் உரிமைகளோடு வாழக்கூடிய சூழல் அமையும் போதுதான் சிங்கள மக்களும் நிம்மதியாக வாழமுடியும். இந்நிலையில் சமாதானம் தொடர்பான எமது நிலைப்பாட்டினை விளங்கிக்கொள்ளாத சிங்கள மக்களிற்கு அதனைத் தெளிவாகத் தெரியப்படுத்துவதுடன்,

நாங்கள் சிங்கள மக்களிற்கு எதிரானவர்கள் அல்லர் என்பதையும் புரியவையுங்கள் என்று தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தென்னிலங்கை செய்தியாளர் குழுவினரைக் கேட் டுக்கொண்டார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## காவலரண் பின்நகர்த்த தேவையில்லையாம்

வடமராட்சி நாகர்கோவிலில் அமைந்துள்ள இலங்கை இராணுவத்தினரின் முன்னரங்கக் காவல்நிலைகளிலிருந்து இராணுவத்தினர் பின்நோக்கிச் செல்லவேண்டியதில்லை என்று இராணுவப் பேச்சாளர் சுமித பெரோரா தெரிவித்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் முன்நகர்த்தப்பட்டிருந்த இலங்கை இராணுவத்தின் முன்னரங்கநிலைகள் பின்நோக்கி நகர்த்தவேண்டும் என்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு கேட்டிருந்தமைக்கே இராணுவப் பேச்சாளர் சுமித பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக இராணுவப் பேச்சாளர் சுமித பெரோரா மேலும் கருத்துவெளியிடுகையில், யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பின்னர் இலங்கை இராணுவத்தினர் தமது நிலைகளை முன்நோக்கி நகர்த்தாமையினால் தாம் தமது நிலைகளை பின்நகர்த்த வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துள்ளார். (ம)

## புலிகள் – பௌத்த பிக்குகள் குழு நேற்று யாழில் சந்தித்துப் பேச்சு!



(யாழ்ப்பாணம்)

பதுளையில் இருந்து யாழ். குடாநாட்டுக்கு வருகைதந்த 46 பிக்குகள் அடங்கிய சமாதானக் குழுவினர் நேற்றையதினம் பொற்பதியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் அரசியற்துறை நடுவப் பணிமனையில் யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் மற்றும் யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி மற்றும் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட ஊடகப் பேச்சாளர் இமையவன் ஆகியோரைச் சந்தித்து உரையாடினர்.

வணக்கத்துக்குரிய ஆயர் டிலக்ஸ் சாந்தபெனான்டோ தலைமையில் சுமார் 46 பௌத்த பிக்குகள் வருகைதந்திருந்தனர். சிங்கள மக்களின் ஐயப்பாடுகள் மற்றும் விடுதலைப் புலிகளின் சமாதான நிலைப்பாடுகள் ஆகியன குறித்தும் மேற்படி குழுவினர் துணை அரசியற்துறைப் பொறுப்பாளரிடம் கேட்டுத் தெரிந்துகொணடனர்.

சுமார் 2 மணிநேரம் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது. இதேவேளை இக்குழுவினர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தியாகி திலீபனின் நினைவுதினம் இன்று உணர்வெழுச்சியுடன் ஆரம்பம்


இந்திய அரசுக்கு எதிராக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 1987 ஆம் ஆண்டு உண்ணாநோன்பு இருந்து உயிர்த்தியாகம் செய்த தியாகி திலீபனின் 17 ஆம் ஆண்டு நினைவு தினம் இன்றிலிருந்து எதிர்வரும் 26 ஆம் திகதிவரை தமிழர் தாயகப்பகுதி எங்கும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

நல்லூரில் தியாகி தீலிபனின் நினைவுத்தூபி அமைந்துள்ள இடத்தில் யாழ் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சொலமன் சூ.சிறில் தலைமையில் இன்று காலை 9 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின்றன. இந்நிகழ்வில் ஈகச்சுடரினை யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஏற்றிவைப்பார். தொடர்ந்து மலரஞ்சலி, நினைவுரைகள், சிறப்புரைகள் என்பனவும் இடம்பெறவுள்ளது.

திலீபனின் 17 ஆம் ஆண்டு நினைவு தினத்தை மிகவும் உணர்ச்சியுடன் அனுஷ்டிக்குமாறு யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை கேட்டுள்ளது. அத்துடன், பாடசாலைகள், உயர் கல்வி நிறுவனங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் .என்பனவற்றில் திலீபனின் நினைவுதினத்தை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்குமாறு மாவட்டக் கல்விக் கழகம் கேட்டுள்ளது.

இறுதி மூன்று தினங்களிலும் திரையரங்குகள், மினிசினிமாக்களை மூடி நிகழ்வை உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பதுடன், அடையாள உண்ணாவிரதங்கள், நினைவுரைகள் மற்றும் கலைநிகழ்வுகளையும் நிகழ்த்துமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச)

## யாழ்ப்பாணம் பிரதம தபாலகம் இன்றுமுதல் புதியகட்டடத்தில்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கண்டி வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடத் தொகுதியில் பிரதம தபாலகம் இன்று புதன்கிழமை முதல் தனது செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளது.

மேற்படி கட்டடத் தொகுதியில் இத் தபாலகம் இயங்குவதற்கு முதற்கட்ட செயற்பாடாக கடந்த சனிக்கிழமை இங்கு சம்பிரதாயபூர்வமாக பால் காய்ச்சப்பட்டது. எனினும், இன்று முதலே இப்பிரதம தபாலகம் தனது செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளது.

பிரதம தபாலகத்திற்கான மேற்படி கட்டடத் தொகுதியில் பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் காரியாலயம், யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் காரியாலயம், வடபிராந்திய நிர்வாக உத்தியோகத்தர் காரியாலயம் மற்றும் பிராந்திய கணக்காளர் காரியாலயம் ஆகியனவும் இயங்கவுள்ளன.(ற-19)

## எரிக் சொல் – ஹக்கீம் நேற்று முக்கிய சந்திப்பு

(கொழும்பு)

இலங்கையின் அமைதி வழிமுறையில் நீடித்துவரும் தேக்கநிலையை நீக்கி அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகளுக்கிடையில் மீண்டும் நேரடிப் பேச்சுவார்த்தையைத் தொடங்கும் நோக்கில் 5 நாட்கள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நேற்று யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், ஈ.பி.டி.பி. கட்சியின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் சமாதானச்

(10 ஆம் பக்கம் பார்க்க)

**நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோவில் மஹா கும்பாபிஷேக சிறப்புமலர் உள்ளே...**

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யு.எஸ். ஓபன் டென்னிஸ் போட்டி பெடரர் கிண்ணத்தை வென்றார்

யு.எஸ்.ஓபன் டென்னிஸ் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ரோஜர் பெடரர் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியிருக்கிறார். மூன்றாவது



கிராண்ட்ஸ்லாம் பட்டம் வெல்லும் ஹெவிட்டின் கனவு பொய்த்துவிட்டது. முதல் செட்கிராண்ட் ஸ்லாம் அந்தஸ்துபெற்ற யு.எஸ்.ஓபன் டென்னிஸ் போட்டிகள் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடந்து முடிந்துள்ள ஒற்றையர் இறுதிப் போட்டியில் உலகின் முதலாம் தர வீரரான சுவிசர்லாந்தின் ரோஜர் பெடரர், அவுஸ்திரேலியாவின லெய்டன் ஹெவிட்டை எதிர்த்து விளையாடினார். இதில பேடரரின் அதிவேகத்திற்கு ஈடுகொடுக்கமுடியாமல் திணறினார் ஹெவிட். இதனால். 18நிமிடங்களில் முதல் செட்டை பெடரர் 6-0 என்ற முன்னிலையில் எளிதில் கைப்பற்றினார். இரண்டாவது செட்டில் இரு வீரர்களும் மாறிமாறி கைப்பற்ற 6-6 என்ற நிலையில் டைபிரேக்கர் முறையில் வெற்றி நிர்ணயிக்கப்பட்டது. இறுதியில் பெடரர் 6-0, 7-6 (7/3) 6-0என்ற நேர்செட்களில் எளிதில் வெற்றிபெற்று, சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். இந்த தோல்வியின் மூலம் ஹெவிட்டின் மூன்றாவது கிராண்ட் ஸலாம் பட்டம் வெல்லும் கனவு தகர்ந்தது.

சம்பியன் பட்டம்வென்ற பெடரர் கருத்துக்கூறுகையில், இந்த ஆண்டில் மூன்று கிராண்ட் ஸ்லாம் பட்டங்கள் கைப்பற்றியதை நமபவே முடியவில்லை. மற்றப் போட்டிகளை விட, யு.எஸ்.ஓபன் இறுதிப்போட்டி நன்றாக இருந்தது. முதல் செட்டில் இருந்து முன்னிலை பெற்றது, வெற்றிபெற சுலபமாக இருந்தது என்றார்.

சம்பியன பட்டத்தை தவறவிட்ட ஹெவிட் கருத்துத் தெரிவிக்கையில, இந்த தொடரில நான் விளையாடிய போட்டிகளில் இறுதிப் போட்டி மிகவும் வித்தியாசமானது. பெடரர் நல்ல தகுதியில் உள்ளார். டெனனிஸ் ஜாம்பவானான பீற்சாம் பிராசின் இடத்தை பெடரர் கட்டா யம் கைப்பற்றுவார் என்று கூறினார்.

இதேவேளை,. பெண்கள் இரட்



டையர் இறுதிப் போட்டியில் தற போதைய சம்பியன்களான ஸ்பெயினின் விர்ஜினா ரானோ பாஸ்கல், அர்ஜென்டினாவின் பாலோகிரஸ் ஜோடி ரஷ்யாவின் ஸ்வெட்லான குஸ்னட்சோவா, எலீனா லிகோவட்சிவா ஜோடியை எதிர்த்து விளையாடியது. விறுவிறுப்பாக நடந்த இப்போட்டியில் பாலோகிரஸ் ஜோடி 6-4,7-5என்ற நேர் செட்களில் ரஷய ஜோடிகளை வீழ்த்தியது. இதன் மூலம தொடர்ந்து மூனறாவது முறையாக இரட்டையர் போட்டியில் சம்பியன் பட்டம்வெல்லும் முதல் ஜோடி என்ற சாதனையை படைத்தன் பாலோகிரஸ் ரானோ பாஸ்கல் ஜோடி.

முன்னதாக நடந்த ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்ற குஸ்னட சோவாவிற்கு இரட்டையர் பிரிவில் பட்டத்தைக் கைப்பற்ற முடியவில்லை. (ப-7)

# ஐ.சி.சி.விதிமுறைகளை மீறியதாக கங்குலி, பதானுக்கு எச்சரிக்கை

விளம்பரப் பிரச்சினை தொடர்பாக இந்திய அணித்தலைவர் கங்குலி, இர்பான் பதான் ஆகியோருக்கு ஐ.சி.சி.கடும் எச்சரிக்கை விடுததுள்ளது. சர்வதேச கிரிக்கெற் சபையில் (ஐ.சி.சி) சார்பில் போட்டிகள் நடத்தப்படுமபோது சில விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகிறது. அதாவது இந்தப் போட்டிகளின் அதிகாரப்பூர்வ அனுசரணையாளருக்கு எதிராக 45 நாட்களுக்கு வேறு விளம்பரங்களில் வீரர்கள் தோன்றக்கூடாது. 2003உலகக் கோப்பை போட்டியின்போதும் இந்தப் பிரச்சினை வெடித்தது. இப்போது மீண்டும் மினி உலகக் கோப்பையில் எழுந்துள்ளது. இம்முறை அதிகாரபூர்வ அனுசரணையாளராக ஹட்ச் மொபைல் நிறுவனம் உள்ளது. இதறகு எதிரான டாட்டா இண்டிகாம் மொபைல் விளமபரத்தில் கங்குலி, பதான் ஆகியோர் நடித்துள்ளனர். இந்த விளம்பரங்கள் தற்போது ஒளிபரப்பப்பட்டு வருகினறன. சில இடங்களில் பதாதைகளாகவும் வைக்கப்பட்டுள்ளன.

இதுவே பிரச்சினைக்கு காரணமாகும். குறிப்பிட்ட நாட்களுக்கு வேறு விளம்பரங்களில் தோன்றக்கூடாது என்ற ஐ.சி.சி. விதிமுறையை கங்குலி, பதான் ஆகியோர் மீறி விட்டதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இதற்கு விளக்கம் கேட்டு இந்திய கிரிக்கெற் சபைக்கு கடிதமும அனுப்பப்பட்டுள்ளது. இதுபற்றி செயலாளர் எஸ்.கே.நாயர் கருத்துத் தெரிவிக்கையில்,

இப்பிரச்சினை தொடர்பாக ஐ.சி.சி. அனுப்பிய கடிதம் கிடைத்திருப்பதாகவும் கங்குலி, பாதனிடம் உண்மை நிலைவரம்பற்றி கேட்டு அறியப்பட்டுள்ளதாகவும் கூறினார். மேலும் இவர்களிடம் சம்பந்தப்பட்ட விளம்பரங்களை நிறுத்த ஏற்பாடு செய்யும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், இந்தப்புகார் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாகவும் டாட்டா இன்டிகாம் நிறுவனத்தையும் குறிப்பிட்ட காலத்துக்கு சர்ச்சைக்குரிய விளம்பரங்களை நிறுத்தும்படி கேட்டுக்கொண்டுள்ளதாகவும் நாயர் மேலும் தெரிவித்துள்ளார். (ப-7)

# அறிமுக அணியான அமெரிக்காவை ஆஸி. 9 விக்கெற்றுக்களால் வென்றது

எல்லாத் துறைகளிலும் தானே முன்னிற்க வேண்டுமென்று எண்ணும் அமெரிக்கா கிரிக்கெற்துறையிலும் தனது கைவிசையைச் காட்ட எண்ணி ஐ.சி.சி. மினி உலகக்கிண்ணப் போட்டியில் பிரவேசித்திருக்கிறது.

ஆயினும் உலக சாதனை ஒன்றை மட்டமான நிலையிலேயே அமெரிக்காவால் ஏற்படுத்த முடிந்திருக்கிறது.

அதாவது ஐ.சி.சி.மினி உலகக் கிண்ணப் போட்டிகளில் மிகக் குறைந்த ஓட்ட எண்ணிக்கைக்கு ஆட்டமிழந்த அணியாக அமெரிக்க அணி சாதனை ஏற்படுத்தியுள்ளது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியல் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கிப்பொன்டிங் போட்டியை விரைவாக முடிக்கும் நோக்கில் அமெரிக்க அணியை துடுப்பெடுத்தாட அழைத்தார்.

அதன்படி களமிறங்கிய அமெரிகக அணி 2 வது பந்துவீச்சிலேயே தனது முதலாவது விக்கெற்றை இழந்தது. ஆரம்பத் துடுப்பாட்டக்காரர் ஜோன்சன் ஓட்டமெதுவும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தார். இரண்டாவது ஓவரில் வினால் ரொமிரோ 1 ஓட்டத்துடன் ரண் அவுட்டானார்.

அலெக்சாண்டர் 8 ஓட்டத்துடனும் மாவியா 23 ஓட்டத்துடனும் சாஸ்பரோவினிற் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர். இறுதியில் 24 ஓவர்களில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 65 ஓடடங்கள் மட்டுமே அமெரிக்காவால் பெறமுடிந்தது. கில்லெஸ்பி, காஸ்பரோவிஸ் ஆகியோர் தலா 4 விக்கெற்றுக்களைப் பெற்றனர்.

ஆக 66 ஓட்டங்கள்எனும் மிக தெளிவான வெற்றி இலக்குடன் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி 7.5ஓவரில் 1 விக்கெற்றை மாத்திரம் இழந்து வெற்றிபெற்றது. மத்தியூ ஹேடன் 23 ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். பொன்டிங் 8 ஓட்டங்களுடனும், கில்கிறிஸ்ட் 24 ஓட்டங் களுடனும் ஆட்டமிழக்காதிருந்தார். (ப-7)

# பங்களாதேஷ் அணியை 9 விக்கெற்றுக்களால் இலகுவாக வென்றது தென்னாபிரிக்க அணி

இலண்டனில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐ.சி.சி.சம்பியன் கிண்ணப் போட்டிகளின் 12ஆம் திகதி நடைபெற்ற தென் ஆபி



ரிக்கா பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான போட்டியில் தென் ஆபிரிக்கா 9 விக்கெற்றுக்களால் இலகுவாக வெற்றிகொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெறற பங்க்ளாதேஷ் அணித்தலைவர் தமது அணியை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

அதன்படி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக ஜாவீட் ஓமரும், முகமட் அஷ்ரபுல் ஆகியோர் களமிறங்கினர். ஆனால் அவர்களால நீண்டநேரம் துடுப்பெடுத்தாட முடியவிலலை. இருவரும் 4 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் லாங்வெல்டின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர். ஓமர் எல்.பி.டபிள்யூ முறையிலும், அஷ்ரபுல் கலிஸால் பிடி எடுக்கப்பட்டும் ஆட்டமிழந்தனர்.

அடுத்து துடுப்பெடுத்தாடிய நவீஸ் இக்பால் அணியின் அதிகூடிய ஓட்டமாக 40 ஓட்டங்களைப் பெற்றார். காலிப் மசூத் 24 ஓட்டங்களைப்பெற்றார். உதிரிகளோடு 14 ஓட்டங்கள் கிடைத்துள்ளன.

பங்களாதேஷ் அணியில் 5 வீரர்கள் 5 ஓட்டங்களுக்குள்ளும் 4 வீரர்கள் ஓட்டம் எதுவும் பெறாமலும் ஆட்டமிழந்தது குறிப்பிடத்தக்கது. இறுதியில் 31.3 ஓவர்களில் 93 ஓட்டங்களுக்கு சகல விக்கெற்றுகளையும் இழந்தது. லாங்வெல்ட், நிற்னி ஆகியோர் தலா 3 விக்கெற்றுக்களைப் பெற்றிருந்தனர்.

94 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலகுவான இலக்கோடு



களமிறங்கிய தென்ஆபிரிக்க அணி ஒரு விக்கெற்றை மாத்திரம் இழந்து 17.4 ஓவரில் தனது இலக்கை அடைந்தது.

ஸ்மித் 42 ஓட்டங்களையும், கலிஸ் 40 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றிருந்தனர். கிப்ஸ் 4 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை பைசாவின் பந்துவீச்சில் நேரடியாக வீக்கெற் வீழ்த்தப்பட்டு ஆட்டமிழந்தார்.

இப் போட்டியின் ஆட்டநாயகனாக 3விக்கெற்றுக்களைக் கைப்பற்றிய தென்ஆபிரிக்கப் பந்து வீச்சாளர் லாங்வெல்ட் தெரிவு செய்யப்பட்டார். (ப-7)



யு.எஸ். ஓபன் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற் றையர் ஆட்டத்தில் ரஷ்ய வீராங்கனை ஸ்வெட்லானா குஸ்நெட்சோவா, சக நாட்டு வீராங்கனை எலினா டேமன் டீவாவை 6–3, 7–5 என் ற நேர் செட்களில் வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென் றார். எலினாவும், ஸ்வெட்லானாவும் தங்களது கோப்பைகளுடன் ...

# மினி உலகக் கோப்பையை வென்றெடுக்க ஆஸியை அடுத்து இந்தியாவுக்கே வாய்ப்பு

மினி உலகக்கோப்பையைக் கைப்பற்றும் வாய்ப்பு அவுஸ்திரேலியாவுக்கு அடுத்ததாக இந்தியாவுக்கே அதிகம் இருக்கிறது என தென் ஆபிரிக்க முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் அலன் டொனால்ட் தெரிவிக்கிறார். சமீபகாலமாக பெரிய எண்ணிக்கைக்குத் தடுமாறிக்கொண்டிருந்த இந்திய கிரிக்கெற் அணி சரியான நேரத்தில் மீண்டும் திறமை காட்டத்தொடங்கியிருக்கிறது. அணித்தலைவர் கங்குலி, சக வீரர்களுக்குச சரியான முன்மாதிரியாக நின்று விளையாடுகிறார். தொடர்ந்து இரு போட்டிகளில 90 ரன்கள் அடித்து, அணியின் வெற்றிக்குக் காரணமாகியிருக்கிறார் எனவும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

சச்சின் டெண்டுல்கர் இல்லாத நிலையில் கூடுதல் பொறுப்பை தோளில ஏற்றிக்கொண்டு கப்டன் கங்குலி இன்னிங்ஸ் ஆட ஆரமபித்திருப்பது எதிரணிகளுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக பாகிஸ்தானுக்கு மினி உலகக்கோப்பைத் தொடரில் இந்தியாவை சந்திக்கவேண்டிய நெருக்கடி காத்திருக்கிறது. கங்குலி மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரர். இந்திய அணியைப் பொறுத்தவரை சச்சினுடன் சேர்ந்து கங்குலியின் ஆட்டமும் எனக்கு மிகவும் பிடிக்கும். அவர் அபாயகரமான துடுப்பாட்டவீரர். அவரை விரைவில் ஆட்டமிழக்கச்செய்வது எப்படி என யோசித்துக்கொண்டிருக்கிறோம் என இனஸமாம்-உல்-ஹக் கூறியிருக்கிறார்.

சரியான நேரத்தில் மிகச்சரியான ஆட்டத்தை வெளிப்படுத்தும் கங்குலி இம்முறை வழக்கத்துக்கு மாறாக ஆடுவதை அனைவரும் கவனித்திருக்கலாம். ஆரம்பம் முதல் அதிரடியை கைவிடடு நிதானமாக நின்று ஆடுகிறார். எதிரணி பந்துவீச்சாளர்களின் பலவீனம்



கங்குலி



டொனால்டு

தெரிந்த பிறகு விளாசத் தொடங்குகிறார். அணியின் ஓட்ட எண்ணிக்கையும் மளமளவென ஏறுகிறது.

அவசர அவசரமாக ஆடுவது எனக்கு விரும்பமான விஷயம் அல்ல. அதேசமயம் பந்துகளை வீணாக்காமல் விளையாட வேண்டும் என்று விரும்புகிறேன். நீண்ட நேரம் களத்தில் நிற்கும்போது பந்தை வீணாக்காமல் நான் அதிக ஓட்டங்களை எடுத்திருப்பதை நீங்கள் பார்க்கமுடியும் என்கிறார் சௌரவ் கங்குலி. அவரது ஆட்டம் கடந்த இரு போட்டிகளிலும் அணிக்கு வெற்றிதேடித் தந்திருக்கிறது. இன்னும் ஒரு ஆட்டம் ஞாயிற்றுக்கிழமை பாகிஸ்தானுக்கு எதிராக இருக்கிறது. இதேபோல ஒரு ஆட்டம் விளையாடினால் போதும் அரையிறுதிக்குள நுழைந்துவிடலாம். அரையிறுதியில் அனேகமாக நமது அணி தெனாபிரிக்காவை அல்லது மேறகு இந்திய தீவுகள் அணியை சந்திக்கவேண்டியிருக்கலாம்.

பலமிழந்த தென்ஆபிரிக்கவைச் சமாளிப்பது பெரியவிஷயமல்ல. தொடர்ச்சியாக மூன்றாவது முறையாக இறுதிப் போட்டிக்குள் நமது அணி நுழைய முடியும். இதுவரை ஏமூாற்றிவந்த மினி உலகக்கோப்பையையும் கைப்பறறமுடியும். வெள்ளை மின்னல் என்று புகழப்படும் தென்ஆபிரிக்க அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் அலன் டொனால்ட் கருத்தும் இப்படித்தான் இருக்கிறது. அவுஸ்திரேலியாவுக்கு அடுத்தபடியாக இம்முறை சம்பியன் பட்டம் வெல்லும் வாய்ப்பு இந்தியாவுக்கு மட்டுமே அதிகம் இருக்கிறது என்று கூறியிருக்கிறார் கங்குலி. (ப-7)

நீர்வேலி

# ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோவில்


## பஞ்சதள இராஜ கோபுர

## மகா கும்பாபிஷேக சிறப்பு மலர் 15.09.2004

# 15.09.2004

### திருவருள் தரும் திருக்கோபுரம்

சகஸ்ரபாகு சம்யுக்தம் சகஸ்ர கிரணோச் வலம் கண்டேந்து மௌளீம் சர்வே சம் பிரதி வக்த்ரம் த்ருலோசனம் ஸ்படிகா பந்தனோ




காந்த்யா சகஸ்ரபத சம் யுதம் ஏவம் த்யாத்வா விஷேண பூஜயேத் கும்ப மத்யமே.

(கோபுர தியானம்)

திருக்கோபுரத்தை தூல லிங்கம் என்று கூறுவார்கள். தூரத்தில் இருந்து கோபுரத்தை கண்டவுடன் எமது புலன்கள் ஒருமித்த நிலை எய்துகின்றன. இறை சிந்தனை மேலோங்குகின்றது. அந்த சிந்தனையுடன் கோபுரத்தை வணங்கி கோயில் உள் சென்று இறைவழிபாடு செய்கின்றோம். கோயிலுட் செல்ல முடியாதவர்கள் புறத்தில் இருந்து கோபுரத்தை வணங்கித் திருவருள் பெறுகின்றனர்.

திருக்கோபுரத்தில் புராண வரலாறு கூறும் சிற்ப வடிவங்களைக் காணலாம். கீழ்ப்பாகம் அகன்று மேல்பாகம் ஒடுங்கிக் காணப்படும். கோபுரத்தின் தோற்றம் எமது உள்ளம் படிப்படியாக உயர்ந்து இறைவனைச் சேரும் என்ற தத்துவத்தைக் காட்டுகின்றது. சப்பரத் திருவிழா தோன்றவதற்கு திருக்கோபுரம் காரணமானதாகவும் கருதப்படுகின்றது. திருக்கோபுரத்தை தரிச்சித்து அடியார் ஒருவர் அவ்வுருவத்தை பு,மியில் இறைவனுடன் சேர்த்து அசைந்து போகும் படியாக அமைக்கலாமா வென்று சிந்தித்தார். அதன் விளைவு சப்பறத் திருவிழா தோன்றக் காரணமாகிற்று. ''கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'' என்று கூறுவார்கள். இவ்வாறு சிறப்புமிக்க திருக்கோபுர கும்பாபிஷேகத்தை இன்று அடியார்கள் தரிச்சித்து திருவருள் பெற்றுய் வீர்களாக.

**சிவஸ்ரீ சி சா. சோமதேவக் குருக்கள்,**
ஆலய பிரதம குரு
அரசகேசரிப் பிள்ளையார் கோவில்,
நீர்வேலி.



### கோபுர தரிசனம்

*கார் மேனியுடைய கண்ணன் மருகனாம்*
*பேர் மிகு அரசகேசரிப் பெருங் கோயிலான்*
*சீர் மிகு பெருங்கோபுரம் சிறந்திலங்கிப்*
*பார் போற்றிப் பரவிடப் பணிந்திடுவோமே*

நீர்வை. மயூரகிரி சர்மா

### சிவதொண்டன் நிலையத்தின் ஆசிச்செய்தி

ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் பஞ்சதள இராஜகோபுர கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்கிறோம். வழிபடும் அவரிடர் கடிபவர் கணபதி. சொற்பதங் கடந்த துரியமெய்ஞ்ஞான அற்புதன் ஈன்ற கற்பகக் களிற்றினையே சைவர்களாகிய நாம் எத்தொழிலைச் செய்யத் தொடங்கும் பொழுதும் முதலாவதாக வழிபடுகின்றோம். சிறந்த இரு விநாயகர் கோயில்கள் உள்ள நீர்வையம்பதிவாழ் மக்கள் பாக்கியவான்களே. இக்கோயில் வளர்ச்சிக்கும் பெருமைக்கும் காரணமாய் இருந்த அடியார்களையும் அன்பர்களையும் வாழ்த்துகின்றோம்.

அன்பு ஓம் சிவ

**சிவதொண்டர்சபை.**

**அ.செல்லத்துரை**
**தலைவர்.**

### பரிபாலன சபையினரின் வாழ்த்துச் செய்தி

திருவும் கல்வியும் சீரும் சிறப்புர நின் திருவடி பாடும் உன் திருவருள் வேண்டி உருவும் திருவும் ஊக்கமும் உதவிட மருகுவார் மனதினில் மலர்ந்திரும் மலரே தளர்வுறாவுணர்வும் தந்து எம் மக்கள் உள்ளத்து அமர்ந்து அருள் செய்வாயே குருவும் தெய்வமும் ஆகிய குணத்தினனே வெருவரு வினைகள் தீர்த்தாளும் பெருமானே குணப்பெரும் குன்றே இராஜகோபுரம் மீதோறும் அரசகேசரி விநாயகா! அருள் பாலிப்பாயே


சிவபூமி என்று அழைக்கப்படும் இலங்கைத் தீவின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்தில் சான்றோர் மலிந்து விளங்கும் நீர்வையம்பதியில் முதற் கோவில் கொண்டவர் அரசகேசரி விநாயகர் ஆவார். விநாயகப் பெருமானுக்கு இராஜகோபுரம் அமைக்கும் பணி அவனருளால் இனிது நிறைவேய்தியது. 2004 .09.15 ஆம் திகதி புதன் கிழமை அதிகாலை 5.30 மணி முதல் 6.30 மணிவரையுள்ள சுபவேளையில் குடமுழுக்கு நடைபெற திருவருள் பாலித்துள்ளது.

கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பார்கள். பூர்வஜென்ம புண்ணிய பலனின் பயனாக குடமுழுக்கு வைபவத்தைக்கண்டு அவனருளாலே அவன் வணங்குவோமாக !

***நீர்வேலி***
***ஸ்ரீஅரகேசரிப்***
***பிள்ளையார் கோவில்***
***பரிபாலன சபை***

## கோபுர தரிசனம்

இந்து மதத்தைச் சார்ந்து வாழும் மனிதன் ஒருவன் தனது வாழ்க்கையைச் சிறப்பான முறையில் செம்மையுற நடத்துவதற்கும் ஆன்மீகத்துறையில் அவன் உள்ளம் நாட்டமாக இருப்பதற்கும் ஆயல வழிபாடு மிக மிக இன்றியமையாததாக அமைகின்றது. ஒரு மனிதனுடைய உடல்



அமைப்பை ஒத்ததாக ஆலயங்கள் ஆகம மரபுக்கமைய அமைக்கப்படுகின்றன. அந்தவகையில் மனிதனுடைய பாதங்களுக்கு ஒப்பானதாக கோபுரங்கள் அமைக்கப்படுகின்றது. இக் கோபுரம் தூலலிங்கம் என்றும் அழைக்கப்படுகின்றது இதன்பொருள் தூரத்தில் வரும்போதே கோபுரத்தைக் காண்பதன்மூலம் யாவர்க்கும் தெய்வீக உணர்வு ஏற்படுகின்றது என்பது கருத்து.

**"கோபுரதரிசனம் கோடி புண்ணியம்"**
**"கோபுரதரிசனம் பாபவிமோசனம்"**

என்பது எமது சமயத்தவரின் நம்பிக்கை. இதற்கமைய ஆலய வழிபாட்டில் கோபுரதரிசனமும் இன்றியமையாத தொன்றாகி விடுகின்றது.

இராஜகோபுரம் என்பதன் தத்துவம் என்னவென்றால் ஒரு நாட்டிற்கு அரசன் ஒருவன் முதன்மையானவனாக இருக்கின்றானோ, அதேபோல் ஓர் ஆலயத்துக்கு கோபுரம் இன்றியமையாததாக அமைகின்றது. இதன் காரணத்தினாலே இது இராஜகோபுரம் என்ற சிறப்புப் பெயரையும் பெற்றுக் கொள்கின்றது.

கோபுரமானது கீழ்ப்பகுதியில் அகன்றும் மேல்நோக்கிச் செல்லச்செல்ல குவிவாக ஒடுங்கிய நிலையில் அமைந்து காணப்படும் இவ்வமைப்பானது அல்லல் உற்று அலைந்து திரிகின்ற ஆன்மாவானது இறுதியில் ஒரு நிலைப்படுகின்ற தன்மையினை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது. அத்துடன் ஒரு மனிதனது மனமானது கூர்மையாக ஒடுங்குவதைக் காட்டி நிற்கின்றது. கோபுர அமைப்பில் இந்துமத்திற்குரிய கலை, கலாசார அம்சங்கள் எடுத்துக் காட்டப்படுகின்றது. அதாவது இசை, நடனம், சிற்பம், ஓவியம் போன்ற நுண்கலை அம்ச தத்துவங்கள் எடுத்துக் காட்டப்படுவதோடு, இதிகாச புராண வரலாற்றுத் தத்துவங்களும் எளிமையான முறையில் சிற்பங்களாக வடிவமைக்கப்பட்டுள்ள தன்மை இக் கோபுர தத்துவங்களாகக் காணப்படுகின்றன.

இந்த வகையிலே நீர்வைப்பதியின் நடுநாயகமாக விளங்கும் ஸ்ரீ அரசகேசரி பிள்ளையார் ஆலய அரசகேசரி மன்னனால் அமைக்கப்பெற்ற சிறப்புமிக்க இவ்வாலயத்தில் கோபுரதரிசனத்தின் அவசியம் கருதி பஞ்சதள இராஜகோபுரம் அமைத்து இன்று கோபுர கும்பாபிஷேகம் விநாயகர் திருவருளால் சிறப்பாக நடைபெறுகின்றது. எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் திருவருள் அனைவருக்கும் கிடைப்பதாக!.

**"விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான் விநாயகனே வேட்கை**
**தணிவிப்பான் விநாயகனே விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாந் தன்மையினாற்**
**கண்ணிற்பணிமின் கனிந்து"**

*சிவஸ்ரீ கு. தியாகராசக் குருக்கள்*
*(நீர்வேலி) கும்பாபிசேஷகபிரதிஷ்டகுரு.*

*அரசசேகரிப்பிள்ளையர் கோவில்*
*நீர்வேலி.*

## கோபுர அமைப்பு

நீர்வைப் பதியின் கண் சிறப்புற்று இலங்கும் ஸ்ரீ அரசகேசரி பிள்ளையாருக்கு இன்று பஞ்சதள இராஜகோபுரம் அமைத்து கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற விநாயகர் திருவருள் பாலித்துள்ளார்.

கோபுரதரிசனத்தின் மேன்மை பற்றி பல நூல்கள் எடுத்தியம்புகின்றன. இறையின்பத்தை பெற்று மேலான சுகவாழ்க்கையை அனுபவித்து எல்லா நன்மைகளையும் அடைய மனிதப் பிறவியே மேன்மையாகின்றது. கோபுரதரிசனம் கோடிபுண்ணியம். கோயிலுக்கு வரமுடியாதவர்களின் ஆன்மாவும் பரிசுத்தமடைந்து இறைவனைச் சேரவேண்டும் என்கின்ற உயர்ந்த நோக்கில் தான் ஆலயங்களில் உயர்ந்த கோபுரங்கள் அமைக்கப்படுகின்றன.

ஆலயங்களோ, கோபுரங்களோ மனதில் நினைத்தபடி அமைப்பதில்லை. ஒவ்வொரு இயக்கமும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் இயங்கி வருகின்றது. விதிமுறையாக ஆலய வழிபாடு அமைய நம் முன்னோர்கள் இறைவனால் உண்டாகிய சிற்ப ஆகமங்களையும் கையாண்டு வந்தார்கள். இவை ஆலய நிர்மாணத்திலிருந்து குடமுழுக்கு வரையிலும் நித்திய நைமித்திய பூஜைகள் உற்சவங்கள் எல்லாவற்றையும் வழிப்படுத்திக் காட்டுகின்றன.

சிற்ப ஆகம நூல்களை ஆழ்ந்து நோக்கும் போது கோபுரம் என்பது ஒளிவடிவான ஈசனின் தோற்றத்தை உணர்த்தும் ஓர் உருவக அமைப்பு என்பது நன்கு விளங்கும்.

கோபுரமானது கீழ்ப்பகுதியில் அகன்றும் மேல்நோக்கிச் செல்லசெல்ல குவிவாக ஒடுங்கிய நிலையில் அமைந்து காணப்படும். கோபுர அமைப்பில் முதலாவதாக நில மட்டத்திலிருந்து (வானமட்டும்) குறிப்பிட்ட பிரமாணம் வரை அமையும் . முதலாவது அமைப்பு வியாழக மட்டம் என அழைக்கப்படும். இவ்வியாழ மட்டத்தின் மேல் ஒன்றுக்கு மேல் ஒன்றாகப் பிரமாண அமைப்பில் அமைவது தளங்கள் ஆகும். இவ்வாறு ஒவ்வொரு தள அமைவிலும் இவ்வமைப்புக்கள் காணப்படும்.

பொதுவாக தோபுரம் ஒன்று அமைக்கப்படும் போது மூன்று, ஐந்து, ஏழு வாயில்கள் என ஒற்றைத் தளங்களை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கவேண்டும் என சிற்ப சாஸ்திர நூல்களும் வேதாகமங்களும் எடுத்துக் கூறுகின்றன. வாயில்கள் எத்தனை அமைக்கின்றனவோ அதற்குத்தக்க வகையில் சிரசாக விளங்குகின்ற கோபுரத்தின் முடிவில் கலசங்கள் அமைக்கப்பட்டு இராஜகோபுரமாக நிறைவு பெறுகின்றன

கோபுரத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு வாயில்களின் இரு மருங்கிலும் காவல் தெய்வங்கள் அமைக்கப்படவேண்டும் என்பது விதியாகும். அதாவது ஆண் தெய்வத்துக்குரிய கோபுரமாக இருந்தால் துவாரபாலகர்களும் சக்தி ஆலயமாக இருந்தால் துவாரசக்திகளும் அமைக்கப்பட்டிருக்கும். இவ்வாறு அமைக்கப்படுவதன் நோக்கம் தூரத்தே நின்று கோபுரத்தை வழிபட்டு கோபுரவாயிலில் உள்ள துவாரபாலகர் அல்லது துவாரசக்திகளிடம் அனுமதிபெற்று பின்ன ஆலயத்தினுள் செல்லவேண்டும் என்பது சிற்ப சாஸ்திர விதியாகும்.

இவ்விநாயகர் அரசகேசரி ஆலயத்தினுடைய இராஜகோபுரமும் ஆகம மரபுக்கமைய அமைக்கப்பெற்று சிறந்து விளங்குகின்றது. எனவே இத்தகைய சிறப்பு மிக்க கோபுர தரிசனத்தின் மேன்மையை அறிந்து வழிபாடாற்றி கோடி புண்ணியம் பெற்றவர்களாக இவ்வுலகில் பிறவிப்பயனை அடைவோமாக!

*சிற்பக் கலைஞர்வே. யோகேஸ்வரன்.*

# ரணிலின் ஸ்ரீகோத்தா முடிவு அரங்கேறுமா?

**கோவையூர் ஜெயன்**



"அடுத்த மூன்று மாத காலத்துக்குள் அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து பெரும்பான்மைப் பலம்கொண்ட அரசொன்றை ஐககிய தேசியக் கட்சி அமைக்கும". இவ்வாறு ஐககிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க கட்சியின் ஆண்டு நிறைவுவிழாவில் பகிரங்கமாக அறிவிததுள்ளார்.

இலங்கை அரசியலில் மாறிமாறி ஆடசிபபீடம ஏறும் கடசிகளாக ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சயும நணடகாலப பாரம்பரியம் கொண்டு விளங்குகின்றன.

காலணித்துவ ஆட்சிக்குப் பின்னர் இலங்கையின் அரசியல் நிர்வாகத்தை மாறி மாறி நகர்த்திச்சென்றது இக கட்சிகள்தான்.

இந்நிலையில், ஐக்கிய தேசியக கட்சித் தலைவரின் மேற்படி அறிவிப்பு ஒன்றும் புதுமையான விடயம் அல்ல. ஆனால் இலங்கையின் இன்றைய அரசியல சூழநிலையயல் ரணிலின் கூற்று ஆழமாகச் சிந்திக்கவேண்டிய விடயமாக அமைந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சயின் ஆட்சி பிடுங்கியெடுக்கப்பட்ட நிலையிலும், தற்பொழுது ஆட்சிப்பீடத்திலுளள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு ஆடடம கணடு தத்தளித்தபோதும், வெளிபபடுத்தாத அல்லது ஆட்சியமைக்க வேண்டுமென்று சிந்திக்காமல அரசுக்கு உதவும் எதிர்க்கடசியாகச் செயற்பட்ட ஐககிய தேசியக் கட்சி, தற்பொழுது வெளியிட்ட முடிவில பல திருப்பங்கள் ஒழிந்திருப்பது தெளிவாகிறது.

ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைத்த ஜனாதிபதி சந்திரிகாவின் ஐக்கிய மககள் சுதநதிர முன்னணி அரசு, ஆட்சியை உறுதியாக நகர்த்த பெரும்பான்மைப் பலம இன்றி அலைகடல் துரும்பு போல அலலாடிககொண்டிருந்தது. அந்தச் சூழ்நிலையில் ஆளும் அரசாங்கத்தால் பாராளுமன்ற சபாநாயகரைத் தெரிவு செய்துகொள்ள முடியாத கையறுநிலை ஏற்பட்டது.

ஆளும்கட்சி அரசாங்கம் நாட்டின் நிர்வாகத்தைக் கொண்டுநடாத்த முடியாமல் திணறிக்கொண்டிருந்த வேளையில், ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் ஆட்சியமைக்கும் அரசியல் களம உருவாகிவிட்டதாக எதிாவுகூறபபட்டபோதும், ஐககிய தேசியக கட்சி அமைதியாக இருந்தது.

ஆனால் அரசின் கைகளைப் பலப்படுத்தும் வகையில இலங்கைத தொழிலாளர் காங்கிரஸ் நிபந்தனையற்ற வகையில் அரசுக்கு ஆதரவு கொடுதது, அரசாஙகத்தை ஸ்திரப்படுத்தியுள்ள நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவா அடுதத மூனறு மாதத்துககுள ஆட்சியை அமைக்கப்போவதாக உறுதியுடன் தொிவித்திருப்பது, அவரின் கருத்துக்குள் அரசியல் உட்கிடையொன்று ஒழிந்திருப்பதையும், அதன் பிரதிபலிப்பு விரைவில் வெளியாகும் எனபதையும் முன்னுணர்த்தி நிற்கிறது.

## மக்கள் வெறுப்பு

அடுத்து ஆட்சி அமைப்பது யார் என்ற போட்டி தெனனிலங்கையில் காலம் காலமாக இருந்துவரும் அரசியல் வாதிகளின் பிழைப்புப போடடி. ஆட்சியை யார் அமைக்கவேணடும் என்று போட்டியிடுவதற்கு முன்னர், இலங்கையில் அடிப்படையாக நிறைவேற்றப்படட வேணடிய விடயங்கள எனன?, அவற்றுக்கு என்ன வழியில் தீாவு காணப்படவேண்டும்?, அதனை எவ்வாறு முன்னெடுததுச் செயற்படுத்தவேண்டும் எனபதை முதலில் உணர்நது, அதனை முன்னெடுக்கும் ஆற்றல் வல்லமை உள்ளதா என்பதைச் சிந்தித்து ஆட்சி அமைப்பதைப் பற்றி முடிபுசெய்ய வேண்டும்.



இலங்கைத் தீவைப் பொறுத்தவரை மிகவும் முக்கியததுவம் பெற்றதும், அவசியமாகத் தீர்வு காணப்பட வேண்டியதுமான பிரச்சினையாகக் காணப்படுவது இனப் பிரச்சினை. இப்பிரச்சினைக்குத் தீர்க்கமான, ஆரோக்கியமான தீர்வை தம்வசம் வைத்திருக்கின்ற கட்சிதான் ஆட்சிப்பீடத்தில் அமரவேண்டும் என மக்கள் எதிர்பார்ககின்றனா. அரசியல் பிழைப்பும் உயர் சுகபோகமும் அனுபவிக்க மாறி மாறி உருப்படியில்லாமல் ஆட்சிக்கு கடசிகள் வருவ்தை மககள் அடியோடு வெறுக்கின்றனர்.

ரணில் விக்கிரமசிங்கவன் ஆட்சியில் ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரை, இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முக்கியத்துவம் கொடுத்து, சமாதான முயறசிகளை முன்னெடுத்துச் சென்றமையையும், தமிழீழ விடுதலைப புலிகளோடு ஓர் புரிந்துணர்வுக்கு உடன்பட்டு தீர்வை நோக்கி நகர்ந்தமையையும் உணமையில் பாராட்டவேண்டும்.

ஏனெனில் இலங்கையின் அரசியல் யாப்பு ஜனாதிபதிக்கு உயர் அதிகாரங்களை வழங்கியிருந்த நிலையிலும் கூட பிரதமராக ஆடசியில் அமர்ந்து ரணில், சமாதானத்துககாகப் பாடுபட்டார் என்பதை மறுதலிக்கமுடியாது.

ஆனால் ஜனாதிபதியின அதிகார உ்சசம, ஐக்கிய தேசியக் கட்சி உருவாக்கிய 1978 ஆம் ஆணடு யாப்பே ரணிலின ஆட்சிக்கும் ஆப்புவைத்தது என்பதும் உண்மை.

1977ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக கடசியின் அப்போதைய தலைவர் ஜே.ஆர் ஜெயவர்த்தனா தமது ஆட்சிக்கு வலுச்சேர்ககும் நடவடிக்கையாக இன்றைய அரசியல் யாப்பை உருவாக்கினார். ஆனால் அவருககு அன்று சாதகமாக அமைந்திருந்த யாப்பு, இன்று அவரது கட்சியின் ஆட்சிக்கே வேட்டு வைத்துவிட்டது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, யாப்பின் மூலம ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட தமது நிறைவேற்று அதிகாரததைப் பயன்படுததி, ரணில் அரசின் ஆட்சியை முடககி, பாராளுமன்றத்தைத் தமது இஷ்டப்படி கலைத்து, ஐக்கிய தேசியக் கட்சியை அரசிலிருநது விரட்டி வட்டுககு அனுபபினார்.

இந்நிலையில் இன்னமும் ஜனாதிபதியுடன் அந்த நிறைவேற்று அதிகாரம் தொங்கிக்கொண்டுதான் இருக்கறது.

இதன் அடிப்படையில ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஆட்சியை அமைப்போம் என உறுதியுடன தெரிவிபபது, அரசியலில் மேலும சிக்கலகளும், குளறுபடிகளும ஆரம்பமாகப்போகிறது என்பதையும் வெளிப்படுத்துகின்றது.

ஏனெனில் ரணில் ஆட்சியை அமைத்தால் ஜனாதிபதி மீண்டும வேதாளம் முருங்கைமரக கதையாக ஆட்சிக்கான அத்திவாரததை அசைப்பார். மீண்டும் ஆட்சியில் குழப்பம் வரும். இநநிலைமைகள்தான் அரசியல் யாப்பு உள்ளவரை தொடரும்.

## யாப்பு மாற்றம் வேணடும்

'ஜனநாயகத்தின வெற்றிக்கு இரு அரசியல் கட்சிகள மட்டும் நாட்டில் காணப்பட வேணடும்'என்று அரசறிவியலாளர்கள் கூறியுள்ளனர். இக்கூற்று ஒருபுறத்தில் சில பாதகமான நிலைமைகளை உருவாக்கினாலும், பல நன்மைகள நாட்டுக்கு ஏற்படுவதற்கு அடிப்படையாக அமையும் என்பதும் உண்மை.

இரு அரசியல் கட்சிகள் நாட்டில் காணப்பட்டால் ஒரு கட்சி பலமான ஆளும் கட்சியாக இருக்கும். அதே நேரம் மற்றக் கட்சி பலமானதொரு எதிர்க்கட்சியாக இருககும். இதனால் அடுத்து ஆட்சிககு வரவேண்டும் என்பதறகாக மக்கள்நலன் சார்ந்த, நாட்டுநலன் சார்ந்த விடயங்களில் மட்டுமே கட்சிகள் ஈடுபடும். அதேநேரம் மக்களின் வாக்குகளும் வீணாக மாட்டாது.

ஆனால் மறுபுறத்தில் இதனால் சிறுபானமைக் கட்சிகள் ஆட்சிக்கு வரமுடியாமல், அரசியலில் பேரம்பேச முடியாமல் பாதிக்கபபடும் என்பதையும் ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும்.

ஆனால் பல கட்சி நாடான இலங்கையில் உதிரிக் கட்சிகள் எல்லாம் கூட்டு முன்னணியாகி அரசில் அமர்ந்துகொண்டு நாட்டின் பிரச்சினை குறித்து அக்கறை




கொள்ளாமல், அதன் தீர்வு நாடிச் செல்லாமலும் வீணே அர்த்தமற்ற அரசியல் நடத்துவது முக்களுக்குப் பெரும் சாபக்கேடாக அமைந்துள்ளது.

கட்சிவிட்டுக் கட்சி தாவி ஆட்சியை முடக்குவதும், ஆட்சியை மாற்றுவதும் இலங்கை அரசியலில் தொடர்வதால், நாட்டில் நிலையான அரசும், ஆட்சியும் நிலைக்க முடியாத துர்ப்பாக்கிய நிலைமை காணப்படுகிறது. இந்த நிலைமைகள் நிச்சயமாக மாறவேண்டும்.

அரசியல் பிழைப்புக்காக கட்சிகள் கொள்கைகளை மறந்து ஆதரவு வழங்குவது, ஆதரவை விலக்குவ்தை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

மேலும் இலங்கையில் தொடருகின்ற இன ஓலம் தீர்ககப்பட்டாலே அரசியலும், நாடும் வளம்பெறும் என்பதை உணர்ந்து அரசியல் வாதிகள செயற்படவேண்டும்.

இத்தகையதொரு அரசியல் சூழ்நிலையில் ஐக்



கிய தேசியக் கட்சி ஆட்சி மாற்றத்தை விரும்புவது நியாயமாகத் தெரிந்தாலும் நிசசயமாக அரசியலில் தீர்வை நாடிச்செலல முடியாத நிலைமையே உருவாகும்.

இந்நிலையில் முதலில் இலங்கையின் நிறைவேறறு அதிகாரம் கொண்ட அரசியல் யாப்பு மாற்றப் படவேண்டும்.

அரசியல்வாதிகள், கட்சிகள் நாட்டின் நிலைமையைச் சரியாகக் கணிப்பிட்டு அறுதிப் பெரும்பான்மையுடன் அல்லது உறுதியான கொள்கைக் கூட்டணியுடன், ஆட்சி அமைத்து நாட்டை சுபீட்சபபடுத்தவேணடும்.

இதனை ஆட்சி அமைக்கத் துடிக்கும் ஐக்கிய தேசியக கடசியும் உணர்ந்து சரியான பாதையில் நகர வேண்டும். ரணிலின் ஸ்ரீகோததா முடிபு நல்ல முடிபாக அமையவேண்டும். அதனை அவர் சரியான வழியில் நகர்த்தவேண்டும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தென்னிலஙகை அரசியல் கட்சிகள எலலாம் கொழுக்கடடையும், மோதகமும்தான்.

இந்தநிலையில் ஆட்சி அமைப்பது யாராக இருந்தாலும் அரசும், அரசியலும் ஒன்றாகவே இருக்கும் என்பது அவர்களின் பட்டறிவு அனுபவம்.

இந்த நிலைமை மாறி புதிய ஆட்சியை விரைவில் அமைக்கப்போவதாக அறிவித்துள்ள ரணிலின் கூற்று அரங்கேறி அமுலாகுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

* * *

> நதியை உணர்ந்தும், அதை
> நிலைநாட்டத் தவறியவன் கோழை.
> -ஷிண்டோ
>
> புமியில் தோனறியதும, ஒவவொருவருககும் சமத்துவம் உண்டு.
> ப,மிக்கு அடியில் போகும்போதும் சமத்துவம் உண்டு.
> - என்கிளாஸ்

## இன்று ஒரு தகவல்

### கலிலியோவின் கண்டுபிடிப்பு

பைசா நகரத்திலுள்ள ஒரு பல்லைக்கழகத்தில் ஒருவர் படித்துக் கொண்டிருந்தார். அந்த ஊரில் ஒரு மாதாகோயில் இருந்தது. அந்த மாதாகோயிலில் ஆராதனை நடந்து கொண்டிருந்தது. இவர் அங்கே போயிருந்தார். ஏதோ ஒரு யோசனையில் அந்த மாதா கோயிலை அண்ணாந்து பார்த்தார். தலைக்கு மேலேயே கூரையில் ஒரு தொங்கு விளக்கு அழகாக அங்குமிங்கும் ஆடிக்கொண்டிருந்தது.

அது ஊசலாடிக்கொண்டிருந்ததை இவர் கொஞ்சம் கவனித்துப் பார்த்தார். அது அப்படியும் இப்படியும் அசையும் போது அங்கும் இங்கும் போய்வந்து வரும் தூரம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டுவந்தது. ஆனால் அதில் ஒரு அதிசயத்தை அவர் கவனித்தார்.

அதாவது ஆரம்பத்தில் ஒரு வினாடிக்கு எத்தனை முறை அங்குமிங்கும் போய்வந்ததோ அதோபோல அசையும் தூரம் குறைந்தாலும் கூட அதே நேரத்தில் அங்குமிங்கும் போய்வந்தது. ஊசலாடிய அந்த விளக்கு சென்றதூரம் குறைந்ததே தவிர அசைவின் எண்ணிக்கை குறையவே இல்லை. அந்த சமயத்திலெல்லாம் கடிகாரங்கள் நடைமுறைக்கு வரவில்லை. அதனால் இதை அவர் எப்படி நிரூபித்தார் என்றால் தன்னுடைய நாடித்துடிப்பை வைத்துக்கொண்டு அசையும் பொருளின் விசாலம் மாறினாலும் கால அளவு மாறவில்லை என்பதை அறிஞர்கள் முன் நிரூபித்துக்காட்டினார்.

இப்படிக் காட்டியவர் யார் தெரியுமா? அவர் தான கலிலியோ விஞ்ஞானமேதை. அந்த விளக்கு எவ்வளவோ காலமாகத்தான் ஆடிக்கொண்டிருந்தது. எத்தனையோ பேர் இதற்கு முன்பும் அதைத் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள். இருந்தாலும் அவர்களுக் கெல்லாம் ஒன்றும் தோன்றவில்லை. ஏதே காற்றில் ஆடுகிறது என எண்ணி விட்டுவிட்டார்கள். ஆனால் இவருக்குத்தான் அதிலுள்ள நுட்பம் புரிந்தது. அது தான் நமக்கும் விஞ்ஞானிக்கும் உள்ள வித்தியாசம்.

கலிலியோ கண்டுபிடித்து நிருபித்துக் காட்டிய அந்த விதியை அடிப்படையாக வைத்துத்தான் "மாறாத கால அளவில் ஊசலாடும் ஊசல் அமைப்பை பெற்ற கடிகாரங்களை உருவாக்கினார்கள். இன்றைக்கு உலகம் முழுவதிலும் நடைமுறையில் இருக்கும் பெண்கலம் கடிகாரங்களுக்கெல்லாம் ஆதாரம் கலீலியோ கண்டுபிடித்த அந்தத்தத்துவம் தான். அப்படிக் கண்டுபிடிக்கப்பட்ட கடிகாரம் இன்று எவ்வளவோ மாற்றங்களைக் கண்டிருக்கிறது. சிலரால் அலாரம் வைக்காமல் காலையில் எழுந்திருக்கமுடியாது.

ஒரு குடும்பத்தில் கணவனும் மனைவியும் பேசிக் கொள்வதில்லை. ஏதோ மனஸ்தாபம் அவர்களுக்குள். வாய்விட்டுத்தான் பேசிக்கொள்வதில்லையே தவிர எழுதி மூலமாகப் பேசிக் கொள்வார்கள். "தேநீர் ரெடியா?" என்று இவர் ஒரு பேப்பரில் எழுதிக் காட்டுவார். "இதோ போட்டுக்கொண்டு வருகிறேன்" என்று மனைவி ஒரு பேப்பரில் எழுதிக்காட்டுவார். "போட்டுக்கொள்வதற்கு எங்கே?" என்று இவர் எழுதிக காட்டுவார் "உங்களது பெட்டியின் மேல் வைத்திருக்கிறேன் என்று இவர் எழுதிக் காட்டுவார்.

இப்படியே அந்தக் குடும்ப்நடந்து கொண்டிருந்தது. ஒரு நாள் அவர் அவசரமாக வெளியூர் புறப்பட வேண்டியிருந்தது. காலை 5 மணிக்கு ரயிலைப் பிடிக்க வேண்டும். அதனால் இவர் என்ன செய்தாரென் றால் ஒரு பேப்பரில் எழுதினார். "நாளைகக்கு 5 மணிக்கு ரயில். நான்கு மணிக்கு வீட்டை விட்டுப்புறப்பட வேண்டும். அதனால சரியாக நான்கு மணிக்கு என்னை எழுப்பு என எழுதிவைத்து மனைவியிடம காட்டினார். அவரும் 'சரி' என்று எழுதி இவரிடம் காட்டினார்.

மறுநாள் ஏழு மணி ஆகிவிட்டது. அப்போது தான் அவர் முழிததார். 5மணிக்கு ரயில் போயிருக்கும். உடனே கோபத்துடன் ஒரு பேப்பரை எடுத்து எழுதினார்." பேசமால் கடிகாரத்தில் அலாரம் செட்பண்ணி வைத்துவிட்டு நான் படுத்திருக்கலாம். உன்னை நம்பினேன் நான்கு மணிக்கு எழுப்பிவிடச் சொன்னேன் என்ன ஆனது உனக்கு?" என்று எழுதி மனைவியின் முகத்திற்கு நேராக நீட்டினார்.

அவரும் பதிலுக்கு ஒரு பேப்பர் துண்டில் "உங்கள் தலையணைக்கு அடியில் பார்க்கவும்" என்று எழுதி நீட்டினார். அவர் உடனே அவசரமாக தலையணையை எடுத்துக் கீழே பார்த்தார். அங்கே ஒரு துண்டுச் சீட்டு இருந்தது. அதில் எழுதியிருந்தது "மணி நான்கு அகிவிட்டது எழுந்திருக்கவும்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கனடா பொங்குதமிழ் நிகழ்வை எதிர்த்து

# ஐக்கிய தேசிய சிங்கள அமைப்பு அந்நாட்டு அரசுக்கு கடிதம்

(கொழும்பு)

கனடாவில் நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வில் தமிழர்களின் பெருமை பற்றி மட்டுமே பேசப்படும் என்று கூறப்பட்டாலும், விடுதலைப் புலிகள் அமைப்பிற்குப் பணம்·சேர்ப்பதற்கே இந்த நிகழ்வு நடை பெறவுள்ளதாகவும் அதனால் இந்த நிகழ்வைத் தடை செய்யவேண்டும் என்றும் கோரி ஸ்ரீலங்கா ஐக்கிய தேசிய சிங்கள அமைப்பு கனடா அரசிற்கும் முக்கிய அமைச்சுக்களிற்கும் கடிதம் அனுப்பிவைத்துள்ளதாகத் தெரிய வருகிறது.

ஸ்ரீலங்கா ஐக்கிய தேசிய சிங்கள அமைப்பு என்று தம்மை அடையாளம் காட்டிக்கொண்டுள்ள இவ் அமைப்பின் தலைவர் மஹிந்த குணசேகர கையெழுத்திட்டுள்ள இக்கடிதத்தில், 2002ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் கனடிய அரசிற்கு எழுதிய கடிதத்தை மீண்டும் ஞாபகமூட்டுகிறேன். அந்தக் கடிதத்தில் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளது போன்று விடுதலைப் புலிகள் தங்களது ஆயுதப் போராட்டத்தற்குப் பணம் சேர்க்கவே இந்த நிகழ்வை நடத்துவ தற்கு ஏற்பாடாகியுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், ஸ்ரீலங்காவில் அரச பயங்கரவாதத்தை முற்றாக மறைத்து, தமிழர்கள் தான் பயங்கரவாதத் திற்குக் காரணமாக இருந்தவர்கள் போன்று வரலாற்றை மாற்றி இக்கடிதத்தில் விளக்கமளித்துள்ள மஹிந்த குணசேகர, கடந்த காலத்தில் தமிழினம் திட்டமிட்டு சிங்கள அரசால் அழிக்கப்பட்டதையும், இனக் கலவரங்களையும், தற்போது சமாதானத்தை ம்றுத்து வரும் அரசின் நிலைப் பாட்டையும் இக்கடிதத்தில் சுட்டிக்காட்டவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ற)

# ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் சர்வதேச விடயம் குறித்து விவாதம்!

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் 59 ஆவது பொதுச்சபைக் கூட்டம் நியூயோர்க்கில் அமைந்துள்ள அதன் தலைமையகத்தில் நேற்று ஆரம்பமாகியது.

ஐந்துநாட்கள் தொடர்ந்து நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் ஐக்கிய நீாடுகள் சபையில் அங்கம்வகிக்கும் நாடுகளின் தேசியத் தலைவர்கள் அல்லது அரச தலைவாகள் அல்லது வெளிவிவகார அமைச்சர்கள் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பொதுச் சபைக் கூட்டத்தில் பல்வேறுபட்ட சர்வதேச விடயங்கள் ஆராயப்படவுள்ளதாக ஐக்கிய நாடுகளின் தகவல் நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அததுடன் மிக முக்கிய சர்வதேச விடயங்கள் மீதான விவாதங்களும் இந்தக கூட்டத்தில் இடம்பெறவுள்ளன.

விவாதத்திற்கு முன்னர் ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையை செயலாளர் நாயகம் கோபி அனான் சமர்ப்பிப்பார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

59 ஆவது பொது செயலாளர் சபைக் கூட்டத்தின் தலைவராக மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான கெமோன் குடியரசின் வெளிவிவகார அமைச்சர் ஜின்பிங் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ் வருடப் பொதுச்சபைக் கூட்டத்தில் ஆயுத மோதல்களைத் தடுப்பது, ஆப்கான் நிலைமை, கியூபாவுக்கு எதிரான அமெரிக்கத தடைகள், மத்திய கிழக்கு விவகாரம், அணுஆயுதக்கலைப்பு, நிலையான அபிவிருத்தி, சர்வதேச பொருளாதாரக கூட்டுறவு உலக மயமாக்கல், சுதந்திரம் உட்பட 158 வெவ்வேறான விடயங்கள் குறித்து ஆராயப் படவுள்ளன.

இதேவேளை இலங்கையின சார்பில் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க, அமைச்சர் அநுராபண்டார நாயக்க ஆகியோர் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். (க-61)

## இராசி பலன்

**15.09.2004**

**(ஆவணி 30 புதன்கிழமை)**

**பிரதமை முன்னிரவு 8.29 வரை**

**உத்தரம் முன்னிரவு 7.07 வரை**

**இராகு காலம் 12.03-1.33 வரை**

**சுப நேரம் 4.33-6.03 வரை**

**அமிர்த சித்தம்**

**மேடம்**
மனமகிழ்ச்சி, காரிய அனுகூலம், பகைவர் நேசம், ஆரோக்கியம்.

**இடபம்**
பணக்குறைவு, அஜீரண ரோகம், காரிய இடையூறு, மனக்கவலை.

**மிதுனம்**
மனச்சஞ்சலம், மாதாசுகம், வேலைச் சுமை, கல்வியில் ஆர்வம்.

**கடகம்**
பிரயாண நன்மை, நற்கீர்த்தி, மனோதைரியம், முயற்சி கைகூடும்.

**சங்கம்**
அதிக செலவு, போசன சுகக்குறைவு, மனோசங்கடம், கௌரவக்குறைவு.

**கன்னி**
வெகுமானம், சயன சுகம், போசன நன்மை, காரிய சித்தி.

**துலாம்**
அமைதிக்குறைவு, சோம்பல் நிலை, பிறருக்கு உதவுதல், காரிய தாமதம்.

**விருச்சிகம்**
தனதானிய சேர்க்கை, குடும்பசுகம், எதிர்பாராத நன்மை, தொழில் விருத்தி.

**தனுசு**
இஷ்டசித்தி, தூரதேச செய்தி, நண்பர்கள் உதவி, நன் கொடை.

**மகரம்**
உத்தியோக பங்கம், குடும்பக் கவலை, வீண்செலவு, கட்டுப்பாடு.

**கும்பம்**
பொருள் விரயம், சரீரபீடை, பிரயாண பயம், சிந்தனை மிகுதி.

**மீனம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், நண்பர்கள் சந்திப்பு, தொழில் வருமானம், கீர்த்தி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## அரச சேவையில் உள்வாங்கப்பட்ட

# பட்டதாரிகளின் விடுமுறை விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

புதிதாக அரச சேவைகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள பட்டதாரிகளுக்கான பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சிபெறும பட்டதாரிகளுக்கான விடுமுறை விதிகள், நிதி அமைச்சின் பிரதிச் செயலாளர் எஸ். பி. திவரத்னவினால் சகல மாவட்ட செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏழு நாள்களுக்குத் தொடர்ச்சியாக வருகை தராத உத்தியோகத்தர்கள் சேவையில் இருந்து நிறுத்திவைக்கப்படுவார்கள்.

இதற்கமைவாக 7 நாள்கள் வரவின்மை காணப்படினும் பயிலுநர் இடைநிறுத்திவைக்கப்பட்டுவர்.

மாவட்ட வைத்திய அதிகாரியின் உறுதிப்படுத்தப்பட்ட வைத்தியச் சான்றிதழ் இன்றி சுகயீன லீவில் நிற்பவாகளும் இதனுள் அடங்குவர்.

பெண ஊழியர் மட்டும் வைத்திய அத்தாட்சியுடன் 84 வேலைநாள்கள் மகப்பேற்று லீவைப் பெற்றுக் கொள்ள இதில் வகை செய்யப்பட்டுள்ளது. (ப-42)

# சந்தேகத்தின் பேரில் 4 சிறுவர்கள் தடுத்துவைப்பு

(திருகோணமலை)

திருகோணமலை தம்பலகாமம் பகுதியில் இருந்து சூரன்கல் நோக்கிச் சென்று கொண்டிருந்த நான்கு சிறுவர்கள கடந்த ஞாயிற்றுக்கிழமை இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். வான் அல பொலிஸாாடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

விடுத்லைப் புலிகள் இயக்கத்தில் இணைய செல்கிறார்கள் என்று கருதியே இராணுவத்தினர் இவர்களைத் தடுத்து வைத்தனர். தமது உறவினர்களிடம் செல்வதாக சிறுவர்கள் கூறிய போதும், இராணுவத்தினர் அதனை நம்பவில்லை. பின்னர் இவர்கள் மாலை அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். தமிழீழ விடுதலைப் புலிகள் சிறுவர்களை தமது படையில சேர்த்துக் கொள்வதில்லை என்பதில் மிகவும் உறுதியாக இருக்கும் இந்நிலையில், இராணுவத்தினரின் இச்செயலானது சிறுவர் உரிமைகளை மீறுவதாக இருக்கின்றது எனப் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது விடயமாக யுனிசெப் நிறுவன அதிகாரி ஒருவர் கருத்து தெரிவிக்கையில், சிறுவர் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்றும், சந்தேகத்தின் பேரில் சிறுவர்கள் தடுத்து வைக்கப்படுவதும், கைது செய்யப்படுவதும் தவிர்க்கபபட வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகள் சிறுவர்கள் மத்தியில் பயத்தை ஏற்படுத்தும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ற)

# நான் கண்ட

## நாட்டுப் பற்றாளர் இரத்தினம்

## மறைந்தார் மாண்பு

"வனை முடிந்தால் திணையாகவும் நில்லாது என்னும் முது மொழியின் மூலம் உயிரின் நிலையாமை,



உலக வாழ்வின் பொய்மை என்பவற்றை நனகு உணர்ந்துகொள்ளக் கூடியதாகவுள்ளது. இந்த விதிக்கு யாரும் விதிவிலக்கல்ல. இந்த விதி ஆண்டி முதல் அரசன்வரை அனைவருக்கும் பொதுவானது.

இந்த விதிக்கு 2004.08.16ஆம் திகதி புலால் உடம்பை நீத்துப் புகலுடம்பைப் பெற்ற, மணணுலகை விடுதது அவாகளும் இலக காணாா என்பது மனதைக் குடையும் செய்தியே!

1941.03.10ஆம் வேலனை-புளியங்கூடலைச் சேர்ந்த செல்லையா+ கனகம்மா தம்பதியினருக்கு வீடும் நாடும் செய்த தவபபயனாக நான்காவது மகனாகப் பிறந்தார். அமரர் இரத்தினம் இவருக்கு மூன்று ஆண் சகோதரர்கள் இருந்தார்கள். இவர் தனது ஆரம்பக் கல்வியை அவ்வூர் பாட சாலையிலேயே கற்றார். பின் 8ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்று வசாவிளான மத்திய மகா வித்தியாலயத்தில் தனது இடைநிலைக கல்வியையும் பெற்றார். கல்லூரியில் படிக்கும் போதே கற்றல் விளையாட்டுப் போன்ற புற பாடவிதான செயற்பாடுகளிலும் தனது அறிவையும், விவேகத்தையும் காட்டினாா.

பாடசாலைப் படிப்பை முடித்துக் கொண்ட இரத்தினம் அரசாங்கப் பொது எழுதுவினைஞர் சேவையில் நியமனம்பெற்று விவசாயத் திணைக்களத்தில் தமது அரச சேவையைத் தொடங்கினார் அங்கு அவரின் நற்பண்பு, பரந்துபட்ட அறிவு, விவேகம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, தலைமைத்துவ ஆளுமை, பனமொழி வித்தகம் என பல அறிவுத்திறமை உடையவராக விளங்கினார். இவற்றின் துனையுடன் அக்கால அரசியலமைப்பில் அதி உயர்ந்த அதிகாரங்கள் மிகுந்த பிரதம மந்திரியின் அலுவலகத்தில் மொழி பெயாபாளராக நியமனம் பெற்று ஒரே ஒரு தமிழராக பல ஆண்டுகள் கடமை புரிந்தார்.

பன்மொழிப் புலமை நிர்வாகத் திறமை, முகாமைத்துவ ஆளுமை போன்றன வாய்க்கப்பெற்ற இவர் இலங்கை நிர்வாகசேவைப் பரீட்சையில் பல தடவை தோற்றிச் சித்திபெற்ற போதிலும் நியமனம் கிடைககப்பெறாத போதிலும் மீண்டும், மீண்டும் முயன்றார்.

இறுதியில் இவர் இலங்கை நிர்வாக சேவைக்கு நியமனம் பெற்று யாழ்.கச்சேரி, வேலணை, சங்கானை போன்ற இடங்களில் தமது அயராத உழைப்பால் மக்கள் மனங்களிலும உயர் அதிகாரிகளின் மதிப்பிலும் உரிய உயர்ந்த இடத்தினை வென்றெடுத்தார்.

இப்படி பல ஆண்டுகள் மக்களபணி ஆற்றிவிட்டு அரசசேவையிலிருநது இளைப்பாறும் வயதை அடைந்த அவர் ஓய்வுபெற்றபோதிலும உழைக்கும் உயர்ந்த நோக்கம் இவரை 'சிறான்' அமைப்பின் யாழ்மாவட்ட இனைப்பாளர் என்னும் உயர் பதவியைப் பெற்றுத்தந்தது. அப்பதவியிலும் தனது கடின உழைப்பால் தனது முத்திரையைப் பதித்தாா. அத்துடன் அவர் சதுரங்க விளையாட்டில் திறமையுள்ளவரலாதளினால் யாழ்.மாவட்டச் சதுரங்க விளையாட்டுக் கழகத்தின் உபதலைவராகப் பணியாற்றும் பெருவாய்ப்பினைப் பெற்றாா.

அவரின் திறமைகளை சேவைகளை மககள் நீண்டகாலம் பெற்று மகிழ்வதைக்கண்டு மனம் பொறுக்காத காலன் இரத்தினம் அவர்களைத் தன்னிடம் 2004.8.1ஆம் திகதி அழைத்துக் கொண்டான் இவரது இழப்பு தமிழ் மக்களின் பெரும் துரதிஷ்டம், பெரும் இழப்பு மக்கள் நல்லதொரு சேவையாளனை இழந்து துயருகின்றார்கள் அவரது குடும்பத்தினர் தமது நல்லதொரு குடும்ப தலைவனை இழந்து துடிக்கிறாகள். நீண்டகாலம் ஒரே அறையில் குடி இருந்து கூடியிருந்து அவருடன் பழகிய அந்த இனிய நாட்களை எண்ணி எண்ணித் துயர்படு

**ஏரம்பு தருமலிங்கம்**
**சாவகச்சேரி**

கின்றேன். இவரது சேவைக்கு வழுங்கபபட்டமே நாட்டுப்பற்றாளர் என தமிழீழ விடு தலைப்புலிகளினால் வழங்கப்பட்டதும் இங்கே நினைவு கூறப்படுகின்றது. அவரது ஆத்மா நித்தியானந்தப் பெருவாழ்வில் ஆழ்ந்து மகிழ்ந்திருப்பதாக.





பொறப்பதியில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் அரசியல்துறை நடுவகபணியகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற பதுளையில் இருந்து வருகைதந்த சமாதானக்குழுவினருடனான சந்திப்பில் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மனன், யாழ்.மாவட்ட மகளிர் அரசயல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி மற்றும் இக் குழுவினருக்கு தலைமைதாங்கிய வணக்கத்துக்குரிய அடிகளார் டிலக்ஸ் சாந்த பெணான்டோ ஆகியோரையும், இதில் கலந்துகொண்ட 46புத்தபிக்குகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:-அலுவலக நிருபர்)

# திருக்குறளுக்கு மாசு கற்பிக்கும் மதவாதிகளுக்கு கருணாநிதி கண்டனம்

அண்மையில் டாக்டர் அம்பேத்கார் பகவத் கீதைபற்றி ஆய்வு



நடத்தி அறிவித்துள்ளதில் சில துளிகளை எடுத்துக்காட்டியதற்காக மதத்தை அரசியலுக்காகப் பயன்படுத்தும் ஒரு கூட்டத்தினர் தம்மீது ஆத்திரம் கொண்டிருக்கிறார்கள் என்று தி.மு.க.தலைவர் கருணாநிதி கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

பகவத்கீதையை ஏற்றுக்கொண்டால் அது உபதேசிக்கும் வர்ண பேதங்களை ஏற்றுக்கொண்டதாக ஆகிவிடுமென்று கூறி அவர்,பிறப்புக்காரணமாக மக்களைப் பிரித்துப் பார்க்கக் கூடாது என்று கூறும திருக்குறளை தான் பின்பற்றுவதால் யாருக்கு என்ன நஷ்டமென்று வினவினார்.


கீதை என்னும் நூல் இருந்து விட்டுப் போகட்டும், ஆனால் அதில் காணபபடும் கருத்துரைதான் கடைப்பிடிக்கக் கூடியன அல்ல என்று தெரிவிதத அவர் பெரியார், அண்ணா பாதையில் பயணம் மேற்கொண்டுள்ள தமக்கு வள்ளுவரின் குறளைப் படிக்காதே என்று கூறித் தடுக்க யாருக்கு உரிமை இருக்கிறது என்று அவர் வினாவெழுப்பினார்.

இந்த உண்மைகளைத் தெரிவித்தால் தம்மீது பாய்கிறார்கள் என்றும் மதத்தை அரசியலுக்கு பயன்படுத்திக்கொள்ளும் தந்திரம் தான் இது என்றும் அவர் குற்றஞ் சாட்டினார். (து)



வங்காளவிரிகுடாவில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலத்தை யொட்டி, கடற்கரையோரப் பகுதியில் கனத்த மழை பெய்து வருகிறது. டாக்காவில் வெள்ளம் சூழ்ந்த சாலையை கொட்டும் மழையில், குழந்தையுடன் கடக்கும் தாய்.



ஆப்ரிக்க நாடுகளில் ஒன்றான தான் சானியாவில் சுற் றுப்பயணம் செய்து வரும் குடியரசுத்தலைவர் அப்துல் கலாம், தலைநகர்டார்–இஸ்–சலாம் நகரில் உள்ள உகுரு பள்ளியில் ஊனமுற்ற மாணவிகளுடன் கைகுலுக்கிய காட்சி.

# வழக்கு ஆவணங்களை நக்கீரன் கோபாலுக்கு வழங்க தமிழக அரசு மறுப்பு

டெல்லியில் நக்கீரன் கோபால் மீதான பொடா வழக்குக்குறித்து விசாரிதத மத்திய பொடா மறு ஆய்வுக்குழு அந்த வழக்குத் தொடர்பான ஆவணங்களை மூன்று நாடகளுக கிடையில் அவருக்கு வழங்க வேண்டுமென்று தமிழக அரசுக்கு நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

இதை எதிர்த்து தமிழக அரசு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுமீது நீதிபதி சொக்கலிங்கம் விசாரனை நடாத்தினார்.

அரசு கூடுதல் வழக்கறிஞர் சேமா யாரஜூலு வழக்கு ஆவணங்களை நக்கீரன் கோபாலுக்குத் தரும்படி உத்தரவிட பொடாமறு ஆய்வுக் குழுவுக்கு அதிகாரம இல்லை என்றார்.

நக்கீரன் கோபால் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் சண்முக சுந்தரம் ஆவணங்கள் இருந்தால் தான் குற்றச்சாட்டுக்கள் குறத்து மறு ஆய்வுக் குழுவிடம் விபரம் தெரிவிக்க முடியுமென வாதடினார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி தமிழக அரசு மனு மீது தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார் (து)


# மறியலில் ஈடுபட்ட கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர்கள் கைது

வரட்சி நிவாரணம், பள்ளிக்கடன் மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் முதலிய கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் முழுவதிலும் நேற்று முன்தினம் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கான இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தொண்டர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இப் போராட்டத்தையொட்டிச் சென்னையில் பெரியார்சிலை முன்னிருந்து மாநிலச் செயலாளர் நல்லக்கண்ணு தலைமையில் புறப்பட்ட தொண்டர் கூட்டத்தைச் சிறிது நேரத்திலேயே பொலிஸார் வழிமறிதது நல்லக்கண்ணு, சட்டமன்ற உறுப்பினர் பழனிச்சாமி உட்படரான மானவர்களைக் கைதுசெய்தனா.

கோவையில் நாளுமன்ற உறுப்பினர் சுப்பராயன் தலைமையில், காஞ்சிபுரம் திருவள்ளூர் பேருந்து நிலையததின் முன்பாக மறியலில் ஈடுபட்ட அனைவரும் கைதுசெய்யப்பட்டனர்.

இதேபோன்று மதுரை, திருச்சி, சேலம், திருபபூர், தஞ்சை, சென்னை உட்பட 120 மையங்களில் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர். (து)



ரலன்ற் முன்பள்ளியின் புதிய வகுப்பறைத் திறப்புவிழா கடந்த 26ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் சு.இராமச்சந்திரன் தலைமையுரை நிகழ்த்து வதையும், விருந்தினர்களாகக் கலந்துகொண்ட முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் துரைசத்தியசீலன் மற்றும் கரவெட்டி கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கருணா ஆகியோரையும் படத்தில் காணலாம்.

படம்: துன்னாலை நிருபர்



எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு யாழ்.நகர் கிழக்கு சமுர்த்தி வங்கி வறிய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும், கணவனை இழந்த பெண் களுக்கு சுயதொழில் முயற்சிக்கான உபகரணங்களும் வழங்கும் நிகழ்வு அண்மையில் பாஷையூர் சென். அன்ரனீஸ் மகளிர் வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதன்போது வங்கியின் கட்டுப்பாட்டு சபைத் தலைவர் பய னாளி ஒருவருக்கு கயிறு திரிக்கும் இயந்திரம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# எழுத்தாளருக்கான உதவித்திட்டம் அடுத்த ஆண்டுமுதல் மீண்டும் அமுல்

(கொழும்பு)

எழுத்தாளர்களுக்கு உதவி வழங்கும் திட்டம் அடுத்த ஆண்டு முதல் மீண்டும் அமுல்செய்யப்ப டும் என தேசிய நூலக சேவையின் தலைவர் டப்ளியூ ஜே.ஏ.அபய சிங்க தெரிவித்துள்ளார்.

தமது படைப்புக்களை பிரசு ரிக்கமுடியாத நிலையிலுள்ள எழுத்தாளர்களுக்கு உதவி வழங்குவதற்காக வருடாந்தம் 15 இலட்சம் உதவுதொகையாக ஒதுக்கப்படவுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 5 ஆம் திகதி கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண் டபத்தில் நடைபெறவுள்ள இலக் கிய விழாவில் கௌரவிக்கப்பட வுள்ள கலைஞர்களின் பெயர்ப் பட்டியல் இம்மாதம் இறுதிக்குள் வெளியிடப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-60)

க.பொ.த.(சா.த)
மாணவர்களே! வலம்புரியில்
தொடர்ந்து பயிற்சி வினாத்தாள்கள்
வெளிவருகின்றன.

விவாத அரங்கு -5
விடயம்
வீடியோப் படப்பிடிப்பு தமிழர்
கலாசாரத்தைப் பாதிக்கின்றது.
பாதுகாக்கின்றது.
நடுவர் : புத்தூர் சி.சிவநேசன்
(பிரபல சட்டத்தரணி)
உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள
அனுப்பவேண்டிய முகவரி
விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

## இரத்ததான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபா வினால் பிரகடனப்படுத்தப்பட்ட உல களாவிய ரீதியிலான இரத்ததான நிகழ்வு எதிர்வரும் 19ஆம் திகதி வடபகுதியில் இடம்பெறவுள்ளது.

இதனடிப்படையில் அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு திரு நெல்வேலி சேர்.பொன். இராமநாதன் வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பா ணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவை நிலையத்தில் இரத்ததான நிகழ்வு இடம்பெறவுள்ளது.

(ற-16)

## நிதி ஒதுக்கீடு

(சங்கானை )

40 வருடங்களாக திருத்தப்ப டாதிருந்த சங்கானையில் உள்ள ஓடக்கரை வீதியை செப்பனிடுவ தற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

வலிமேற்கு பிரதேச செயலர் எஸ். ஏ. மோகன்றாஸின் விடா முயற்சியின் பலனாக மேற்படி வீதியைச் செப்பனிடவென சுமார் 17 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி அரசினால் ஒதுக்க ப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்படுகின்றது.

(க-20)

## மகளிர் சங்கமம்

(திருநெல்வேலி)

வடமராட்சி கோட்ட மகளிர் சங்கம நிகழ்வு எதிர்வரும் 19 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நெல்லியடி முருகமூர்த்தி ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது.

விடுதலைப்புலிகளின் மகளிர் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெ றும் இந்நிகழ்வில் பல்வேறு தீர் மானங்கள் நிறைவேற்றப்படவுள் ளன.

(ப-43)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

புதிய சம்பளத் திட்டம் இது வரை அமுலாக்கப்படாததைக் கண்டித்து நாடு முழுவதிலுமுள்ள பல்கலைக்கழக கல்விசாரா ஊழி யர்களினால் நடாத்தப்பட்டுவரும் வேலைநிறுத்தப் போராட்டம் 15 ஆம் நாளாக இன்றும் தொடர்கின் றது.

இது சம்பந்தமாக அரசாங்கம் இதுவரை எதுவித பேச்சுவார்த்தை களும் நடாத்த முன்வராத நிலை யில் நேற்றைய தினம் அனைத் துப் பல்கலைக்கழக தொழிற் சங்கங்களின் கூட்டுக்குழு கள னிப் பல்கலைக்கழகத்தில் கூடி தொழிற்சங்கப் போராட்டத்தை முனைப்பாக்கும் வழிவகைகள் பற்றி ஆராய்ந்துள்ளது.

எனவே, இது குறித்து கலந்து ரையாட யாழ். பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் அனை வரையும் இன்று புதன்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். பல் கலைக்கழக இராமநாதன் மண் டப முன்றலில் தவறாது சமுக மளிக்குமாறு பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கேட்டுள்ளது.

(ற)

## நிரந்தர நியமனம்

(கோண்டாவில்)

பனை அபிவிருத்திச் சபை யில் சுமார் பத்து ஆண்டுகளுக்கு மேலாகியும் அமைய அடிப்படை யில் கடமைபுரிந்துவந்த போதனா சிரியர்கள் மற்றும் சிற்றூழியர் கள் சுமார் முப்பது பேருக்கு அண் மையில் நிரந்தர நியமனம் வழங் கப்பட்டுள்ளது.

சபையில் ஐந்து வருடங்கள் கடமையாற்றிய ஊழியர்களுக்கு இந்த நிரந்தர நியமனம் வழங்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-50)

## அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப் பின் பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜின் ஏற்பாட்டில் நாவற் குழி ஐந்து வீட்டுத்திட்டம், அற்புத அன்னை சனசமூக நிலையமும், வீதியும் புனரமைப்புத் தொடர்பான அங்குரார்ப்பண வைபவம் நாளை வியாழன் பிற்பல் 3.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் பிர தம விருந்தினராகக் கலந்து கொண்டு இவ்வைபவத்தை ஆரம் பித்துவைக்கவுள்ளார். (ற-16)

31ம் நாள் கண்ணீர்க் கவிதாஞ்சலி

முன்னாள் வேலணை பிரதேச செயலரும், யாழ். மாவட்ட சிறான் இணைப்பாளரும், சிறந்த விளையாட்டு வீரரும், கலை இலக்கிய ஆர்வலரும், பன்மொழி வித்தகரும், சமய சமூக சேவையாளரும், நாட்டுப்பற்றாளருமாகிய

அமரர்

செல்லையா இரத்தினம்

மண்ணக மலர்வு 10 03 1941

விண்ணக விரைவு 16 08 2004



தீவகத்து நலன்கருதிச் செய்த பணி கொஞ்சமல்ல
யாவருக்கும் நல்லவராய் வாழ்ந்திறத்தல் பஞ்சமல்லோ
ஆவலுடன் எக்கலையும் ஆய்ந்தறியும் உம்திறனைத்
தேவர்களும் தெரிந்துகொள்ளச் சீக்கிரமாய் அழைத்தாரோ!

மண்டை தீவிருந்து மணிநயினா தீவுவரை
எண்டைக்கும் என் சேவை இருக்குமென இயம்பிடுவீர்!
பண்டைத் தமிழ்மொழிபால் பாசமுற்று வன்னிமண்ணில்
தொண்டுசெய்யச் சென்றீரே! சொர்க்கந்தான் சேர்ந்திருப்பீர்!

அம்பிகையின் உற்சவத்தில் அதிகாரம் தனையொதுக்கி
நம்பிவரும் அடியாரின் நலனுக்காய் அடியார்போல்
நம்பிக்கை யோடுழைத்தீர் நாகம்மாள் உமையழைத்தாள்
வெம்பிமனம் வாடுகின்றோம்! வேதனையில் வாழுகின்றோம்!!

பிறப்புண்டேல் இறப்புண்டு; பெரும்பணிகள் செய்தவர்கள்
இறப்பின்பின் எங்களுக்கு இனிச்சேவை செய்வது யார்?
அறப்பணிகள் பலசெய்து அன்னை தமிழணங்கைச்
சிறப்பித்தீர் செல்லையா இரத்தினமெம் முத்தையா!

திங்களொன்று சென்றாலும் தேறவில்லை எம்மனது
உங்கள் திருமுகந்தான் ஒளிர்கிறது எப்போதும்
தங்கள் பிரிவாலே தவிக்கின்ற உறவுகளின்
பொங்கும் துயர்போக்க பொழிந்திடுவீர் சாந்திமழை!
ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி!

கவியாக்கம் -
நயினை இராகுலன்

இப்படிக்கு
சேவையை மறவாத
நயினாதீவு மக்கள்.

(8797)

# நெதர்லாந்து தூதுவர் யாழ்ப்பாணம் விஜயம்



றோயல் நெதர்லாந்து தூதுவர் சூசன்பிளாங்கார்ட் மற்றும் அவரின் செயலாளர் யோன்குஸ்கான் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை விமானம் மூலம், பலாலி விமானநிலையத்திற்கு விஜயம் செய்திருந்தா. இவருக்கு யாழ். பாதுகாப்பு நடவடிக்கை தலைமையகத்தில் வைத்து யாழ். பாதுகாப்பு படைத்தளபதிக்குப் பதிலாக பிரிகேடியர் டி.எம்.டி. அல்விஸ் யுஎஸ்பி, பிஎஸ்சி அவர்களை வரவேற்று பின்னர் யாழ். பிர தேச பாதுகாப்பு சம்பந்தமாக விளக்கமளித்தார். இதன்போது யாழ். பிரதேசத்தில் இடம்பெயர்ந்தவர்களின்நிலை சம்பந்தமாக கலந்து ஆலோசிக்கப்பட்டது. (ப)

# நல்லூரான் திருவடிக்கு



## பூங்காவனம்
## வருவோம் நல்லை இந்நாளே

நித்திய வாழ்க்கை அருள்வோனே
நீதியின் வடிவாய் அமர்வோனே
சத்திய ரூபா வேலவனே
சகலமும் உணர்ந்த தத்துவனே
ஆனந்த ரூபா வேலப்பா
அடியேன் வாழ்க்கை பொய்யப்பா
புழுவினும் கடையேன் உன்னாலே
புண்ணியம் பெற்றேன் இந்நாளே
வாழ்வினில் வருவாய் முன்னாலே
வருவோம் நல்லை இந்நாளே

கவிமணி கந்த முழுகேசதாசனார்.

## வந்தெமக் கருளுவாயே

தெத்திவரு பச்சைமயின் மீதிலொரு குற வள்ளி
தெய்வானை அம்மை உடனே
சேர்ந்துநனி ஆரோகணித்துலவு செய்கின்ற
செந்தில் வடி வேலாயுதா
நந்தியுனை நாயினேம் காடோறும் பணிதலுன்
நயனங்கள் காண்பதிலையோ
நந்திவா கனனான நடராசன் மைந்தனே
நல்ல கணபதி யிளனுசா
மத்தினால் அடிபட்ட மாயவன் மருகனே
மன்றுளா டியவன் மகனே
மல்குகண்ணீ சொரிய வாடிடும் மெகக்கு நீ
மாபெரும் வாழ்வை யருள்வாய்
வந்து நிறை நல்லையில் வள்ளிதெய்வானை
வாழ்வுகொள் கந்த வேளே
வடிவேல் கரம் வண்ண மயில் மீதேறி
வந்தெமக் கருளுவாயே

'சமூக இரத்தினம்'' எம்.கே. இளையப்பு

## உன் பரிசு வேண்டும்

மன்றாடி மகனே மன்றாடு கின்றேன்
வென்றாடு வெற்றி முருகா- தீமை
கொன்றாடு வீர முருகா - உன்மையின்
கன்றாடு சிவம் வாழ்க என்றாடு யாவுமே
உன்பாடு தெய்வ முருகா - என்றன்
முன்பாடு சைவ முருகா

விரலிமலை தன்னிலே பரவுகிற அடியவர்
வினை தீர்க்கும் வள்ளி தோழா எனது
வேண்டுதல்கள் யாவும் பாழா - பரிசு
தரவிமையோர் பதமெனினும்தருவது
நீஇல்லையெனின்
தட்டிடுவேன் தெய்வ முருகா - கைகள்
கொட்டிவா சைவ முருகா!

மைதிலி சிவகிருபராஜா

## தருக உந்தன் தண்ணருளே

குருதிக் கடலில் உயிர் மாய்க்கும்
கொடிய யுத்த நீங்கிடவும்
பெரும் பகைமை உணர்வெல்லாம்
பேச்சின் மூலம் தீர்ந்திடவும்
முருகா கந்தா சிவபால
முகுந்தன் மருகா அதிதீரா
தருக் உந்தன் தண்ணருளே
சாரும் நல்லைப் பெருமாளே!

சின்னப்பா, தனங்களப்பு

## தந்திடையா விடுதலையை

தரணி போற்றிடும் தமிழ் அழகன்
திருக்குமரன் புகழ் பாட
தினமும் பக்தர் சூழ்ந்திருப்பர்
எல்லையில்லா நின் புகழை
அவனி தனில் நான் பாட
பவனி வரும் முருகவேலா
அசுரரை அடக்கித் தேவர்
குலம் காத்த குமரவேலா!
தமிழ் காத்த தங்க வேலா!
தந்தைக் உப தேசம் பகன்றவா!
சிந்தை மிகு சக்தி வேலா!
தமிழ்க் குமரா! திருவேல் அழகா!
தந்திட ஐயா எனக்கு விடுதலையை

கேதாரணி ஒளிவண்ணன்

# கேணல் ராஜுவின்
# 2வது ஆண்டு நினைவுநிகழ்வு ஏழாலையில் நடைபெற்றது

(யாழ்ப்பாணம்)

கேணல் ராஜுவின் 2ஆம் ஆண்டு நினைவு நிகழ்வும், உடுவில் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் வீர முரசம் நிகழ்வும் 7.30 மணிக்கு ஏழாலை மகாவித்தியாலய மைதானத்தில் இடம் பெற்றன.

உடுவில் பிரதேச தேசிய எழுசசிப் பேரவையின் செயலாளர் செ. செலவரத்தினம் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் பொதுச சுடரி னை யாழ். மாவட்ட அரசியல துறை பொறுப்பாளர் சி.செம்மணன் ஏற்றி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து அப்பகுதி மாவீரர்களின் திருஉவுருவப் படங்களிற்கு மாவீரர்களின் உரித்தானவர்கள் சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்தனர்.

பின்னர் இடம் பெற்ற நினைவு நிகழ்வுகளில் சர்வதேச மாணவர் பேரவைத் தலைவர் பகீரதன் யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஆகியோர் நினைவுரைகளை வழங்கினா. சிறப்புரையை யாழ். மாவட ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளா் செம்மணன் வழங்கினார்.

இறுதியாக கலைபண்பாட டுக கழக மகளிர் பிரிவினரின் " சங்க நாதம்'' நிகழ்வு நடைபெற்றது. மிக உணர் வெழுச்சியுடன் நடை பெற்றது (ப)

## நல்லொழுக்கம் குறித்து பிரசாரம்

(சங்கானை)

வடபிரதேச நல்லொழுக்க சமமேளனத்தினர் நடாத்தும் நல்லொழுக்கம் பற்றிய பிரசார நடவடிக்கை நாளை வியாழக் கிழமை பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது . (க-20)

# சிறுவிளம்பரம்
## O/L English

மார்கழி 2004 பரீட்சைக்கான வகுப்புக்கள் திங்கள், புதன், வெள்ளி காலை 6.30 -7.30 திங்கள், வெள்ளி மாலை 7.30- 8.30 கடந்த காலப்பரீட்சை வினாக்களும் மாதிரி வினாக்களும் விசேடமாக செய்யப்படுகின்றன.

கே.சோமசுந்தரம் சந்தை ஒழுங்கை- அம்மன் வீதி சந்தி, சுதுமலை வடக்கு மானிப்பாய்.

(8794)

## SPOKEN ENGLISH

மிகக் குறுகிய காலத்திற்குள் எளிதில் ஆங்கிலம் பேசக் கூடிய வகையில் மாணவர்கள் உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிநாடு செல்லுபவர்களுக்கு செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில்காலை 7-8 வரை கற்பிக்கப் படுகிறது. K.சோமசுந்தரம், சந்தை ஒழங்கை அம்மன் வீதிசந்தி, சுதுமலை வடக்கு,மானிப்பாய்.

(8794)

# ஜனாதிபதி- இராணுவ அதிகாரிகளின் கருத்துக்களில் பல்வேறு முரண்பாடுகள்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் போர்புரியும் நிலை தொடர்பில் பல்வேறு முரண்பட்ட கருத்துக்களை ஜனாதிபதியும் இராணுவ முன்னணி அதிகாரிகளும் கூறி வருகின்றனர்.

கடந்த வாரம் ஐக்கிய மக்கள் சுதந்திர பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின்போது, நாம் போரிடத் தயாரில்லை எனவே புலிகள் நினைத்திருதால் இடைக்கால நிர்வாகத்தை மட்டு மன்றி தனிநாட்டையே பிடித்திருக்கலாம். என ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

ஆயினும் உயர் இராணுவ அதிகாரி ஒருவர் ''சண்டே லிடர்'' ஆங்கில வார இதழுக்கு தகவல் தெரிவிக்கையில், இராணுவம் எப்போதும் பேருக்குத் தயாராகவே உள்ளது எனக் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை, இராணுவப் பேச்சாளர் அமேதா பெரேரா ஜனாதிபதியின் கூற்றுத் தொடர்பில் கருததுத் தெரிவிக்க மறுத்து விட்டார்.

ஆனால், இராணுவத்திற்கு சுமார் 4ஆயிரம் புதியவர்களை இ னைத்து தற்போது பயிற்சியளிக்கப்பட்டு வருவதாகவும விரைவில் இன்னொரு தடவையும் புதியவர்களைச சேர்த்துக் கொள்ளவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (க-6)

# இலங்கையில் சமாதானம் ஏற்பட்டாலே சர்வதேச நாடுகள் நிதி வழங்கும்

## சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதி தெரிவிப்பு

**இலங்கைக்கான நிதியுதவிகளை அரசியல் ரீதியாக நாம் வழங்கவில்லை. இலங்கையில் நிரந்திர சமாதானம் ஏற்பட்டால் மட்டுமே சர்வதேச நாடுகளின் நிதியுதவிகள் நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கு சரியான முறையில் வழங்கப்படும் என சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஜிம்பிக் கார்டர் தெரிவித்துள்ளார்.**

ஜே.வி.பி.யின் பிரதிநிதிகளை நேற்றுமுன் தினம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்திய போதே இவர் இதனைத் தெரிவித்தார்.

சமாதான முயற்சிகளின் தற்போதைய தாமத நிலையினைக் காரணங்காட்டி இலங்கைக்கு சர்வதேச நாடுகள் வழங்கும் நிதியுதவிகள் தடுக்கப்படுவது தொடர்பில் தமது அதிருப்தியினை ஜே.வி.பி.யின் முக்கியஸ்தர்கள் ஜிம்பிக் கார்டரிடம் தெரிவித்தனர்.

இலங்கைக்கான நிதியுதவிகள் பொருளாதார அடிப்ப டையில் வழங்கப்பட வேண் டும்.என்றும் அவை அரசியல் அடிப்படையில் வழங்கப்படக் கூடாது எனவும் அவர்கள் வலியுறுத்தினர்.

அதற்குப் பதிவளித்த ஜிம்மிக் கார்டர் ,

நாட்டில் நிரந்தரமான சமாதானம் ஒன்று ஏற்படுத்தப்படும் போது மட்டுமே அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் யுத்தம் மீண்டும் ஏற்படுமா என்ற அச்ச நிலையில் அபிவிருததிப் பணிகள் முன்னெடுக்கப்பட முடியாது என சர்வதேச அமைப்புக்கள் கருதுகின்றன.

தற்போது ஆரம்பிக் கப்பட்டுள்ள குளங்களைப் புனரமைப்புச் செய்யும் அரசாங்கத்தின் திட்டம் வினைத்திறன் அற்றது. அதனால் அதிகபெரும் நிதி இழப்பீடு ஏற்படும் என்றும் விசனம் வெளியிட்டுள்ளார்.

இலங்கை நாணய நிதியத்தின் பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வரும் நிலையில் கடன் உதவிகளை இலங்கை நாணய மதிப்பில் வழங்க வேண்டும் என ஜே.வி.பி. விடுத்த கோரிக்கையினை நிராகரித்த காட்டர் உலக வங்கி உட்பட அனைத்து நிதிய மைப்புகளும் தமது நிதிப் பயன பாடுகளுக்கு டொலாப் பெறு மதியை மட்டுமே பயன்படுத்தி வருகின்றமையையும் சுட்டிக் காட்டினார். (க-121)


# கேள்வி கோரல்

## யாழ்ப்பாணத் தொல்லியல் நூதனசாலைக் கட்டத் திருத்த வேலை

மேலே குறிப்பிடப்படும் வேலைக்கான அரங்கு முத்திரையிடப்பட்ட Nfstpfs ICTAD ல் பதிவு செய்யப்பட்ட M-8 தரத்திலுள்ள இலங்கை கட்டட ஒப்பந்தகாரர் சங்க அங்கத்தவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கேள்விகள் இச் செயலகத்தில் ரூபா 1000/- மீளளிக் கப்பட முடியாத கட்டணம் செலுத்திப் பெறப்பட்ட கேள்விப் படிவத்தில் இணைப் பிரதிகளில் 2004.09.24ம் திகதி பிற்பகல் 2.00 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப் படிவங்களை 2004.09.22 ம் திகதி 2.00 மணி வரை இவ் அவலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். கேள்விகளை அரசாங்க அதபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என முகவரியிட்டுப் பதிவுத தபால் மூலம் அனுப்பி வைக்கலாம் அல்லது நேரடியாக தலைமைப் பீட உதவி அரசாங்க அதிபரின் அறையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியிலிடலாம். கேள்விகள் சமர்ப்பிக்கப்படும். கடித உறையின இடது பக்க மேல் மூலையில் " யாழ். தொல்லியல் நூதனசாலைக் கட்டடத் திருத்தம்" எனக் குறிப்பிடப்பட வேண்டும். காலதாமத மாகச் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. மேலதிக விபரங்களை மாவட்டச் செயலகத்தில் தலைமைப் பீட உதவி அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**செ.பத்மநாதன்**
அரசாங்க அதிபர் யாழ்.மாவட்டம்

(C /520)


# பஸ்– சைக்கிள் விபத்து சிறுவன் ஸ்தலத்தில் பலி

(புத்தளம்)

புத்தளம் நுரைச்சோலைப் பகுதியில் தனியார் பஸ் ஒன்று சைக்கிளுடன் மோதியதில், சைக்கிளில சென்ற சிறுவன் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இச் சம்பவம் இடம் பெற்றது.

முல்லைத் தீவிலிருந்து இடம் பெயர்ந்து புத்தளம் நுரைச் சோலையில் வசித்து வரும் முகமது இராசீர் (வயது 13) என்ற சிறுவனே இவ்வாறு பலியான வராவார்.

இதனையடுத்து சம்பவ இடத்தில் ஒன்று கூடிய மக்கள் சம்பவத்துடன் தொடர்புடைய பஸ்சை தீயிலிட்டுக் கொழுத்தியதுடன் சாரதியையும் தாக்கியுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக கற்பிட்டிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-15)

வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு - குறள்

வலம்புரி

## இலங்கையை விரும்பும் அமெரிக்கத் தந்திரம்

இந்துமாகடலில் தனது ஆதிக்கத்தை நிலை நாட்டுவதில் அமெரிக்கா மிகவும் அக்கறையோடு இருக்கிறது. உலகம் முழுவதையும் தனது ஆதிக்கத் திற்குள் வைத்திருக்க விரும்பும் அமெரிக்காவிற்கு இந்தியா போன்ற வளர்ந்து வரும் வல்லரசுகளின் எழுகை பெருந் தடையாகவுள்ளது.

இதனால் இந்துமாகடலில் தனது ஆதிக்கத்தை ஆழமாகப் பதிய வைப்பதன் மூலம், இந்தியாவின் வல்லாண்மையை நசுக்க முடியுமென்பது அமெரிக் காவின் திட்டம். இதனை நிறைவேற்றுவதற்கு இந்தி யாவிற்கு அண்மித்திருக்கக் கூடிய ஒரு நாடு தேவை யாகவுள்ளது.

இத்தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்கு இந்தியாவின் பரம எதிரியாக இருக்கக் கூடிய பாகிஸ் தானை அமெரிக்கா தெரிவு செய்தது.

பாகிஸ்தானில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டு வதன் மூலம் இந்தியாவின் வல்லாதிக்கத்திற்குத் தடை விதிக்க எண்ணிய அமெரிக்கா, இந்தியா-பாகிஸ்தான் பிரச்சினைக்குத் தூபமிட்டு வந்தது.

பாகிஸ்தானை இந்தியாவுடன் முண்டவைத்து இரு நாடுகளுக்குமிடையே தீராத பகையை வளர்ப் பதில் அமெரிக்கா பாரிய திட்டத்தைத் தீட்டியது.

காஷ்மீர் பிரச்சினையினூடாக பாகிஸ்தானில் இருந்து தீவிரவாதிகளை இந்தியாவிற்குள் அனுப்பி இந்தியர்களைக் கொல்வது, அதன் மூலம் இந்தியா-பாகிஸ்தான் யுத்தத்தை ஏற்படுத்துவது. அந்த யுத் த்தினூடாக பாகிஸ்தானுக்கு ஆயுதங்களையும், இராணுவத்தையும் வழங்கி இந்தியாவைத் தாக்கு வதென்பதாக அமெரிக்காவின் திட்டம் தீட்டப்பட் டிருந்தது.

இதன் வெளிப்பாடாகவே கார்க்கில் பிரச்சினை உருவாக்கப்பட்டது. எனினும் இந்தியாவின் நுட்ப மான தீர்மானம் பாரத மக்களின் தேச பக்தி காரண மாக அமெரிக்காவின் தந்திரம் தோல்வி கண்டது.

பாகிஸ்தானில் நிலைகொள்வதன் மூலம் இந்து மாகடல் பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்ள முற்பட்ட, அமெரிக்காவை ஒசாமா பின்லேடனின் தாக்குதல் நிலைகுலைய வைத்தது.

இந்தியாவின் பலத்தை நசுக்குவதற்கு தனக்குப் பாகிஸ்தான் உதவி செய்யுமென நம்பியிருந்த அமெ ரிக்காவுக்கு பாகிஸ்தான் மீது நம்பிக்கையீனம் ஏற் பட்டது.

ஒசாமா பின்லேடனை பாகிஸ்தானே மறைத்து வைத்திருகின்றதென்ற சந்தேகம் பாகிஸ்தானுடனான உறவைக் கைவிட வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்த, அமெரிக்காவின் கழுகுப் பார்வை இலங்கை மீது திரும்பியது.

உள்நாட்டுப் பிரச்சினைக்குள் சிக்கியிருக்கும் இலங்கையில் தலையிடுவது போலக் காட்டிக் கொண்டு தனது ஆதிக்கத்தை அங்கு நிலைநாட்ட அந்த நாட்டைப் பயன்படுத்தலாமெனத் திட்டம் போட்டது.

அமெரிக்காவின் திட்டத்திற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசில் விஞ்ஞான தொழில் நுட்பத்துறை அமைச்சராக இருந்த மிலிந்தமொறகொட உதவி புரிந்தார். இலங்கையில் யுத்தத்தை நிறுத்தி நாட் டில் சமாதானத்தை ஏற்படுத்துவது போலவும், யுத்தத் தால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கை புனரமைக்க நிதியுதவி புரிவதாகவும் வித்தை காட்டியது. இதற்கு மேலாக விடுதலைப் புலிகளைத் தனது நாட்டில் தடை செய்து இலங்கை ஆட்சியாளர்களின் விசுவா சியாகவும் அமெரிக்கா தன்னை இனங்காட்டிக் கொண்டது.

இவ்வாறு சமாதான விரும்பி போலத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு இலங்கைக்குள் நுழைந்த அமெரிக்கா தற்போது தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகள் குறித்து எதுவுமே பேசாது மௌனம் சாதிக்கின்றது. மாறாக தனது இலக்கை அடைந்து கொள்வதற்காக இலங்கை அரசுக்கு யுத்தக் கப்பலை விற்பனை செய்தது, படையினருக்கு பயிற்சியளித்தது-அளிக்கின்றது. போதாக்குறை அமெரிக்காவின் பசு பிக் கடற்படைக்குப் பொறுப்பாக இருக்கும் தளபதி யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு விஜயம் செய்து படைத் தளங்களைப் பார்வையிட்டுள்ளார். பார்த்தீர்களா அமெரிக்காவின் சமாதானப் பிரியம்.

# இ.தொ.கா.அமைச்சரின் நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதியிடம் முறைப்பாடு

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட பின்னர் அதன் நாடாளுமன்ற உறுப் பினர் முத்துசிவலிங்கம் அமைச்சராகவும், எம்.எஸ்.செல்லச் சாமி பிரதியமைச்சராகவும் பதவிப்பிரமாணம் செய்து கொண டனர்.இதன்போது இவர்கள் நடந்து கொண்ட விதம் குறித்து ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடுகளை முன்னாள் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் சி.பி.ரட்நாயக்க மற்றும் பிரதியமைச்சர் சந்திர சேன ஆகியோர் மேற்படி முறைப்பாட்டை செய்துள்ளனர். குறிப்பிட்ட இருவரும் அமைச்சர்களாவும், பிரதியமைச்சர்களாகவும் கடந்த வெள்ளிக்கிழமை பதவிப்பிரமாணம் செய்து கொண்ட பின் னர் அன்று மாலையே அமைச்சகங்களுக்கு சென்று தமது பொறுப்புக்களையும் ஏற்றுக்கொண்டனர்.

எனினும் அந்த நேரம்வரை முன்னாள் அமைச்சர்களான சி.பி.ரட்நாயக்கவுக்கும், பிரதியமைச்சர் சந்திரசேனவுக்கும் தமது பொறுப்புகளுக்கு வேறு இருவர் நியமிக்கப்பட்டுள்ள விடயம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிலையில் புதிய அமைச்சரும், பிரதியமைச்சரும தமது பெறுப்புக்களை ஏற்றுக்கொண்ட போது முறைப்படி நடந்து கொள்ளவில்லை என தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து ஜனாதபதி தரப்புத் தகவல் தெரிவிக்கையில், புதிய நியமனம் குறித்த விடயம் ஜனாதிபதியினால் அறிவிக்கப்பட்ட போதும் அவரின் செயலகம் அதனை நடைமுறைப்படுத்தவில்லை என கூறியுள்ளது. (ற)

# இ.தொ.காவின்நடவடிக்கைகளுக்கு மலையக மக்கள் கடும் அதிருப்தி

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் இணைந்து கொண் டமை தொடர்பாக பெரும்பாலான மலையக மக்கள் மத் தியில் அதிருப்தி தோன்றியிருப்பதாகத் தெரிவிக்கப்படு கிறது.

இலங்கைத் தொழிலாளா காங்கிரஸ் கட்சிக்கு வாக்களித்த மக்களின் நலன்களைப் புறக்கணித்து, தமது சொந்த நலன்களை முதன்மைப்படுத்தி தொழிலாளர் காங்கிரஸ் செயற்பட்டிருப்பதாக அக்கட்சியின் நடவடிக்கைகள் குறித்து கடுமையான விமர்சனங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

ஊடகங்கள் பலவற்றிலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நடவடிக்கைகளை விமர்சிக்கும் கட்டுரை களும், ஆசிரியர் தலையங்கங்களும் தீட்டப்பட்டி ருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

இது தொடர்பாக கண்டனக் கட்டுரையொன்றை வெளியிட்டுள்ள தமிழ் பத்திரிகையொன்று, அரசுடன் இணைவதற்கான முடிவை அறிவிப்பதற்காக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் செய்தியாளர் மாநாட்டை நடாத்திய ட்ரான்ஸ் ஏசியாக உல்லாச விடுதிக்கான கட்டணம் கூட, ஏழைத் தொழிலாளரின் உழைப்பிலிருந்து பெறப்பட்ட பணம் என்று அதில் கடுமையான தொனியில் விமர்சித் திருக்கின்றது.

இதேவேளை, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சை இலங் கைத் தொழிலாளர் கங்கிரஸ் பொறுப்பேற்றவுடன் அமைச் சின் செயலாளராக இருந்த இராமனுஜம் அந்தப் பதவியி லிருந்து விலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# அரசின் சாதகமான பதில் இவ்வாரத்தினுள்; புலிகள் நம்புவதாக அரச ஊடகம் தகவல்

(கொழும்பு)

இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தை தொடாபான அரசாங்கத்தின் சாத்தியமான பதில் இந்த வாரத்தினுள் தமக்கு கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் தமிழீழ விடு தலைப்புலிகள் இருப்பதாக அரசாங்க ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இடைக்கால நிாவாக சபை யோசனையின் அடிப்படையில் பேச்சுவாாத்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டில் எதுவித மாற்றங்களுமில்லை எனவும், இதுதொடாபான சாத்தியமான பதிலை இம்முறை அரச தரப்பு வெளியிடுமென விடுதலைப் புலிகள் எதிரப்பார்ப்ப தாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயாமாஸ்டரை மேற்கோள் காட்டி அந்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன், கடந்த காலங்களில் போர் நிறுத்த ஒப்பந் தத்தை, அரசியல் ாதியாகவும், இராணுவ ாதியாகவும் பாதிக் கச்செய்யும் வகையிலான பல்வேறு சம்பவங்கள் இடம் பெற்ற போதிலும், போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விடுதலைப் புலிகள் ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லையென விடுத லைப் புலிகளின் ஊடகப் பேச்சாளர தயா மாஸ்டா தொிவித்துள் ளதாகவும் இவ்வூடகம் மேலும் செய்தி வெளியிட்டுள்ளது. (ற)

## கந்தளாயில் துப்பாக்கிச் சூடு இராணுவ அதிகாரி பலி; 2பேர் காயம்

திருகோணமலை கந்தளாய் பகுதியில் உள்ள 92ஆம் இலக்க பொலிஸ காவலரணுக்கு அருகில நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன், இருவர் காயமடைந்துள்ளனர்.

மேற்படி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந் தவர் இராணுவ அதிகாரி என தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் காவலரணில் கடமையில் ஈடுபட்டிருந்த ஊர் காவல் படையினருக்கும் வான் ஒன்றில் பயணம் செய்தவர் களுக்கும் இடையே இந்த துப்பாக்கிப் பிரயோகம் இடம் பெற்றுள்ளதாக கந்தளாய் உதவி பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

வானில்பயணித்த ஒருவர் ஊர்காவல் படை வீரரிடமிருந்து துப் பாக்கியை பறிக்க முயற்சித்தபோதே பரஸ்பரம் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளது.இதில் ஒருவர் உயிரிழந்த துடன், இருவர் காயமைடந்துள்ளனர்.

இந்த சம்பவத்தையடுத்து,திருகோணமலை நோக்கிச் சென்ற வான் தொடர்பாக பல தகவல்கள் கிடைத்துள்ளதாகக் கூறிய பொலிஸார் மேற்படி வானைத் தேடிவருவதாகவும் தெரிவித்துள்ளனர். (ற-121)

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் கடத்தல் சந்தேக நபர்கள் விளக்கமறியலில்

(மட்டக்களப்பு)

மடடக்களப்பு செங்கலடி பிரதேசத்தில் ஈ.பி.டி.பி. உறுப்பி னரான மணாளன் எனப்படும் ராஜேந்திரம் சங்கர் என்பவர் கடததப்பட்டு காணாமல்போன சம்பவம் தொடாபான அடை யாள அணி வகுப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்ற போது, 2 சந்தேக நபர்களும் சாட்சிகளினால் அடையாளம் காணப் பட்டுள்ளார்கள்.

கடநத மாதம் 29ஆம் திகதி செங்கலடியிலுள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்திலிருந்து கடைக்குச் சென்ற சமயம் இனந் தெரியாத 6 நபர்களினால் ஆயுதமுனையில் இவர் கடத்தப்பட்டதாக ஏறாவூர் பொலிஸில் புகார் செய்யப் பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணையை மேற்கொண்ட பொலிஸாரினால் வந்தாறுமூலையைச் சேர்ந்த நடராஜா சுதாகரன், களுவன்கேணியைச் சேர்ந்த காளிக் குட்டி சந்திரசேகரம் ஆகியோர் ஏற்கனவே கைது செய்யப் பட்டு மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

இது தொடாபான அடையாள அணிவகுப்பு நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் பதில் நீதிபதி கே.தங்கவடிவேல் முன்னிலையில் நடைபெற்ற போது 2 பெண்கள் உட்பட 3 சாட்சிகளும் சந்தேக நபாகளை அடையாளம் காட்டினார்கள். இதனையடுத்து சந்தேக நபர்கள் நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.அஜ்மீர் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது எதிர்வரும் 27ஆம் திகதி வரை இவர்கள் மீதான விளக்கமறியல் உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது. (ற)

## ஆபரணத்தொழிலாளி படையினரால் கைது

(கொழும்பு)

மட்டக்களப்பு முனைத்தீவைச் சோந்த ஆபரணத் தொழி லாளி ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தற்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு செட்டியார் தெருவில் ஆபரண தொழிலாளியாக பணிபுரியும் இவா கொழும்புத் துறைமுகத்தை அண்டிய வீதி வழியாக சென்று கொண்டிருந்த வேளையே கைது செய்யப் பட்டுள்ளார்.

தர்மலிங்கம் பேரின்பம்(வயது 41) என்ற இந்த ஆபரணத தொழிலாளி கடற்படையின் விசாரணைகளின் பின்பு கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப நபர்கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது எதிர்வரும் 24ஆம் திகதி வரை இவரை வெலிக்கடைச் சிறைச்சாலையில் விளக்கமறி யலில் வைக் குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ற)

## திினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

மனிதனே மேலானவன். எல்லாமிருகங் களை விடவும், எல்லாத் தேவர்களை விடவும் மனிதன் உயர்ந்தவன். மனிதனைவிட உயர்ந் தவர் யாருமேயில்லை. மனிதனுக்குள் ஏற்க னவே புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வியாகும்.

சுவாமி விவேகானந்தர்

## பத்திரிகையாளர்குழு இன்று யாழ். வருகை

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடன் இன்று தென்பகுதியைச் சேர்ந்த பத்திரிகையாளர் குழு ஒன்று பத்திரிகையாளர்களையும், உள்ளூர் பிரமுகர்களையும், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளையும் சந்திப்பதற்காக யாழ் குடாநாட்டிற்கு விஜயம் செய்கிறது.

இன்று மாலை 4 மணிக்கு யாழ் நாவலர் கலாசார மண்டபத்தில் இச்சந்திப்பு நடைபெறும். (க)

## புலிகள்...

நேற்று கிளிநொச்சியில் தன்னை சந்தித்துக் கலந்துரையாடலை மேற்கொண்ட தென்னிலங்கை பத்திரிகையாளர் குழுவினரிடமே தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு கேட்டுக்கொண்டார்.

தேசிய சமாதானப் பேரவையின் ஊடகப் பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா தலைமையில் கிளிநொச்சி சென்ற பத்திரிகையாளர் குழுவுடன் சமாதானப் பேரவையின் தேசிய இணைப்பாளர் எஸ்.பி.நாதன், சிரேஷ்ட உறுப்பினர் நிமலன் கார்த்திகேசன் ஆகியோரும் சென்றிருந்தனர்.

தென்னிலங்கை பத்திரிகையாளர் குழுவினருடனான கலந்துரையாடலின்போது தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது,

இலங்கையில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுபவர்கள் தங்களது ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்வதற்காக சமாதான செயற்பாடுகளைக் குழப்பி வருகின்றனர். ஆட்சியாளர்களின் இத்தகைய செயல் காலம்காலமாக நடைபெற்றுவரும் ஒரு நிகழ்வாகப் போய்விட்டது. அந்நிலை இன்னும் தொடர்வதினால்தான் சமாதான முயற்சிகள் இழுபறி நிலையில் உள்ளது.

சமாதான முயற்சிகள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாளுக்கு நாள் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்து வருவதோடு, ஜே.வி.பியினரும் சமாதானத்தைக் குழப்பும் வகையிலான கருத்துக்களையும் தெரிவித்துவருகின்றனர். இவைகள்தான் தற்போதைய சமாதான முன்னெடுப்புக்களுக்குத் தடையாக இருந்து வருகிறது.

எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் சிங்கள மக்களுக்கு எதிரானவர்கள் அல்லர். சிங்கள மக்கள் பிரதேசத்தில் அனுபவிக்கின்ற அரசியல் உரிமைகளை ஒத்ததாக தமிழ் மக்களும்அனுபவிக்க வேண்டும். தமிழ் மக்கள் தமது அரசியல் உரிமைகளோடு வாழுகின்ற சூழல் அமையும்போதுதான் சிங்கள மக்களும் நிம்மதியான சூழலில் வாழமுடியும்.

இந் நிலையில் சமாதானம் தொடர்பான எமது நிலைப்பாட்டின் நியாயத்தன்மையை விளங்கிக்கொள்ளாத சிங்கள மக்களுக்கு எமது தெளிவான நிலைப்பாட்டை எடுத்துக் கூறுவீர்கள் என்று நம்புகிறோம் என்று கூறிய சு.ப.தமிழ்செல்வன், தென்னிலங்கையில் இருந்து வெளிவரும் சில சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் எமது போராட்டத்தின் நியாயத் தன்மையை விளங்கிக் கொள்ளாதவகையில் செய்திகளை வெளியிட்டு வருவதையிட்டு மிகுந்த வேதனை அடைகிறோம் என்றும் தெரிவித்தார். (ம)

## எரிக் சொல்...

செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடலை மேற்கொண்டுள்ளார்.

சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவுடன் நேற்றுக்காலை இடம்பெற்ற சந்திப்பில் தடைப்பட்டுப்போயுள்ள சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிப்பதில் உள்ள சிக்கல்கள் குறித்தும், அவற்றை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பின் பின் ஊடகவியாளர்களுக்கு ரவூப் ஹக்கீம் கருத்துத் தெரிவிக்கும்போது, தடைப்பட்டுப்போயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுமானால் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துச் செயற்படாமல் பாராளுமன்றத்தில் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வடகிழக்கைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களோடு ஒன்றாகச் சேர்ந்து கலந்துரையாடி ஒன்றுபட்ட நிலைப்பாட்டை எடுப்பதுதான் எங்களுடைய நிலைப்பாடாகும்.

இயன்றவரை நாங்கள் இதுதொடர்பாக முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளோம். இது சம்பந்தமான கருத்துக்களை நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவரிடம் முன்வைத்திருக்கின்றோம் எனத் தெரிவித்தார்.

(இ-121,08)

# எமது தலைவரின் காலத்திலேயே நாம் விடுதலை பெறவேண்டும்!

### யாழ்.மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன் தெரிவிப்பு

இன்றைய சமாதான காலத்தில் 52 மாவீரர்களை விலையாகக் கொடுத்து சமாதானத்தைத் தக்கவைத்து வருகின்றோம். நாங்களாக சண்டையை ஆரம்பிக்கமாட்டோம்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறையின் துணைப் பொறுப்பாளர் செம்மணன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்றைய தினம் இடம்பெற்ற மாணவர் பேரவை உறுப்பினர்களுடனான கூட்டத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் அங்கு தொடர்ந்தும் உரையாற்றும்போது,

தமிழ்த் தேசியத்துக்காக நாம் பெரும் விலையைக் கொடுத்துள்ளோம். எமது மாவீரர்களதும், மக்களதும் தியாகங்கள் வீண்போகக்கூடாது. எமது கனவுகள் நனவாக நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயல்படவேண்டும். எமது காலத்திலேயே இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமானதும், முடிவானதுமான தீர்வினைக் காணவேண்டும். இன்றைய அவலங்களை எமது அடுத்த சந்ததி அனுபவிக்க நா இடமளிக்கக்கூடாது.

இன்றைய நிலையில் நாம் மிகவும் பலமாகவே இருந்து வருகின்றோம். எமது தேசியத் தலைவர் போராட்டத்தையும், கல்வியையும் இரு கண்களாகவே பார்க்கின்றார். எமது தலைவரின் காலத்திலேயே நாம் எமது விடுதலையைப் பெறவேண்டும் என்பது முக்கியமானதாகும். எமது போராட்டத்திற்கு மாணவர்கள் பெரும் பங்களிப்புச் செய்துவருகின்றனர். இந்தவகையில் மாணவர்கள் தமது பங்களிப்பை மென்மேலும் வழங்கவேண்டும் என நாம் விரும்புகின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு படையை அணி அணியாக அனுப்புவேன் என ஜனாதிபதி சந்திரிகா அண்மையில் சூளுரைத்திருந்தார். தமிழீழ விடுதலைப் புலிகளும் தமிழீழ மக்களும் அவர்களை வரவேற்கத் தயாராகவே உள்ளனர் என்றும் செம்மணன் குறிப்பிட்டார். (ற-16)

# தமிழீழ நீதி, நிர்வாகப் பிரிவினருடன் ஊடகவியலாளர்கள் கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் தமிழீழ நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பராவை நேற்று நண்பகல் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். இச் சந்திப்பு கிளிநொச்சியிலுள்ள தமிழீழ நீதி, நிர்வாகப் பணிமனையில் இடம்பெற்றது.

இச் சந்திப்பில் நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, தலைமை நீதியாளர் ஒப்பிலான், பிரதம செயலாளர் நிக்ஸன், சட்டவாக்கப் பொறுப்பாளர் இசைஅமுதன், சட்டத்தரணி யூட் நிமலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பின்போது தமிழீழ நீதி, நிர்வாகம்பற்றி ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டதுடன், நீதிமன்ற வளாகங்களுக்கு அவர்கள் அழைத்துச்செல்லப்பட்டு அவை காண்பிக்கப்பட்டது. (ச)

# தமிழீழ உரிமப் பத்திரம் வைத்திருந்தவர் கைது

(யாழ்ப்பாணம்)

தமிழீழ் போக்குவரத்துக் கழகத்தால் வழங்கப்பட்ட மோட்டார் உரிமப் பத்திரங்களை வைத்திருந்த மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் ஒருவர் நேற்று பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

குறிப்பிட்ட மோட்டார் சைக்கிளை திருத்துவதற்காக கொண்டுசென்றபோது போக்குவரத்துப் பொலிஸார் பிரஸ்தாப நபரை மறித்து மோட்டார் பதிவு ஆவணங்களை பரிசோதனை செய்தனர். அதன்போது குறிப்பிட்ட மோட்டார் சைக்கிளுக்கு தமிழீழ போக்குவரத்துக்கழகத்தால் வழங்கப்பட்ட ஆவணங்களே காணப்பட்டன.

இதனையடுத்து அவரை கைதுசெய்த பொலிஸார் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். அவரை விசாரணை செய்த நீதிவான் எதிர்வரும் நவம்பர்மாத முற்பகுதியில் இலங்கை மோட்டார் திணைக்களத்தினால் வழங்கப்படும் மோட்டார் பதிவு ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார். (ச)

# போராட்டத்தில் குதிக்கப்போவதாக சுகாதார ஊழியர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

சுகாதார சேவைகள் தொழிற்சங்கங்கள், சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்ளப்போவதாக அரசாங்கத்தை எச்சரித்துள்ளன.

நாளை வியாழக்கிழமை தொடக்கம் சுகாதார அமைச்சின் காரியாலயத்துக்கு முன்பாக இப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

தொழிற்சங்கங்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பல மாதங்களாக இடைநிறுத்தப்பட்டுள்ள வேலைக் கொடுப்பனவுகள், தற்காலிக ஊழியர்களின் வேதனம் மற்றும் சுகாதார அமைச்சின் சில பகுதிகளை தனியார்மயப்படுத்துவது போன்றவற்றை அரசாங்கம் தீர்க்கத் தவறியமை தொடர்பாகவே இப் போராட்டம் இடம்பெறவுள்ளதாக தொழிற்சங்கங்களின் பேச்சாளர் தெரிவித்தார்.

(இ-8)

## புலிகள் - பௌத்த..

இன்றையதினம் மாலை உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசங்கள் ஆன தெல்லிப்பழை, கீரிமலை, பன்னாலை, கொழும்புத்துறை மற்றும் அரியாலை ஆகியவற்றைப் பார்வையிடுவதுடன், நாளை யாழ்ப்பாணத்திலுள்ள அகதிமுகாம்களையும் பார்வையிடவுள்ளனர்.

இச்சந்திப்பின்போது பிக்குமார் முன்னிலையில் கருத்துத் தெரிவித்த செம்மணன், நாட்டில் இடம்பெறும் படுகொலைச் சம்பவங்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எந்தவிதமான தொடர்புமில்லை. சமாதானத்தைக் குழப்பும் நோக்கம்கொண்ட தீய சக்திகளே இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பதாகத் தெரிவித்ததுடன், இடைக்கால நிர்வாகம் தொடர்பான பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு ஜே.வி.பி. பாரிய இடையூறுகளை ஏற்படுத்தி வருவதாகவும், இக்கட்சியை உரிய வழியில் கொண்டுவர பிக்குமார் ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இதன்போது கருத்துவெளியிட்டுள்ள பௌத்த பிக்குமார், தாம் சமாதானத்திற்கு எதிரானவர்கள் என பிரசாரப்படுத்தப்படுவதை மறுக்கும் வகையிலேயே இந்த விஜயத்தை மேற்கொண்டதாகத் தெரிவித்துள்ளனர்.

மனித சமூக அபிவிருத்தி நிலையத்தின் அனுசரணையில் பதுளை ஸ்கொட் அமைப்பு இந்த பௌத்த பிக்குகளின் விஜயத்தை ஏற்பாடு செய்திருந்தது.

இதேவேளை, சமாதானத்திற்கும் நல்லிணகத்திற்குமான குழுவினர் நேற்று இந்து குருபீடம், காயத்திரி காமகோடி பீடம், ஆயர் இல்லம் ஆகியவற்றுக்கும் சென்று கலந்துரையாடியுள்ளனர். (ச-05,43,1






இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.09.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.